போன் நெ' 15.   விலை 2 அணா   RFGD. NO. 4642

திராவிடநாடு

மலர் 12   6—6—54   இதழ் 49

Collected Tamil and English elements into a format.

வெற்றி! வெற்றி! — என்று ஆனந்தத்தோடு கூறியிருக்கிறார். மக்கள் காட்டும் ஆதரவு என்னே! என்னே!—என்று அகமகிழ்ந்து தெரிவித்திருக்கிறார்.

இந்தத் திட்டம் நிறைவேறி விட்டால், எழிலாகும் நம் நாடு!—என்று ஆனந்தத்தோடு அறிவித்திருக்கிறார்.

குளிர்ச்சி வழங்கும் உதகையிலே அகில இந்திய சமூக முன்னேற்ற திட்டத்தின் அதிகாரிகள் கூடிப் பேசினராம். கூட்டத்தின் முடிவில் குதூகலத்தோடு மேற்கண்டவண்ணம் கூறியிருக்கிறார், திட்டத்தின் பொறுப்பாளர் எஸ். கே. டே.

ஆண்டு மூன்றாக, ஐந்தாண்டுத் திட்டம் என்ற பெயராலும், சமூக நல அபிவிருத்தித் திட்டம், பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் எனும் பெயர்களாலும், பல இடங்களில் நடைபெறும் காரியங்கள் செவ்வனே நடப்பதாக அகமகிழ்கிறார், டே!

திரைப் படங்களில்கூடக் காண்கிறோம்—'அதோ பாரீர்! அந்தக் கிராமத்து மக்கள், தாங்களாகவே முன்வந்து ரோடு போட்டுக் கொண்டனர்.' 'இதோ! இந்த ஊரில் ஜப்பானிய முறையில்-சாகுபடி செய்ததால் இவ்வளவு விளைச்சல் அதிகம்' என்பனபோன்ற துண்டுப் படங்களை.

அவைகள் கற்பனையல்லவாம்! உண்மையாம்!!—டே, கூறுகிறார்.

ஒருவேளை, அவருக்கு ஆங்காங்குமுள்ள அதிகாரிகளிடமிருந்து, அத்தகைய 'ரிபோர்ட்' கிடைத்திருக்கும்போலும்.

'ரிப்போர்ட்' அனுப்பினால்!

அதனாலேயே மக்களின் ஆதரவோடு, தேசிய திட்டம் ஒன்றும் அடுத்தபடியாக அமுல் நடத்த விரும்புவதாகத் தெரிவித்திருக்கிறார்.

என்ன குறை இனிமேல்? சமூக நலத் திட்டம்! பிர்க்கா அபிவிருத்தித் திட்டம்! தேசிய திட்டம்!—பாலைவனம், சோலைவனமாகிவிடும். பஞ்சம், பட்டினி பறந்துவிடும். இன்பம் வழியும்! சுகம் பொங்கும்!!

டே, இவ்வண்ணம் சர்க்காரின் திட்டப்பற்றி சிலாகித்துப் பேசிய அதே நாளிலே, இதோ ஓர் செய்தி விருதுநகருக்கு அருகேயுள்ள கௌண்டம்பட்டியிலிருந்து.

அடிதடி! பலத்த காயம்!'

15 பேர், ஆஸ்பத்திரியில்.

போலீசார் விரைந்தனர்.

இரண்டு மூன்று கிராமத்தார் தாக்கிக்கொண்டனராம். நீண்ட நாள் பகையோ, புகைந்துகொண்டிருந்த விரோதமோ அல்ல, அடிதடிக்குக் காரணம் — சமூக நல அபிவிருத்தி திட்ட விழா!

டே, கூறுகிறார்—மக்கள், மனமுவந்து, ஆதரிப்பதாக!

செய்தி கூறுகிறது, அடி-தடி, கலகம், என்பதாக!

கௌண்டம் பட்டியில், சமூக நல அபிவிருத்தித் திட்டத்தின் சார்பில், விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றனவாம் — இதுவும், ஓர் பிரிவாம், அத்திட்டத்தில்! — அப்போது நடைபெற்ற ஓட்டப் பந்தயத்தில் வெற்றி பெற்றவர் இன்னாரென்று தேர்ந்தெடுக்கும்போது, போட்டியிட்டவர்கள் தாக்கிக் கொண்டனராம். கௌண்டம்பட்டி, வேலூர், புதுக்கோட்டை ஆகிய மூன்று கிராம மக்களும் 'குருக்ஷேத்ரம்' நடத்தினராம் 15 பேருக்கு பலத்த காயமாம்! போலீசார், ஸ்தலத்துக்கு விரைந்தனராம், அமைதியை நிலைநாட்ட!

சமூகநல அபிவிருத்தித் திட்டம், மக்களின் அன்போடு நடத்தப்படுவதாக, டே, கூறுகிறார். இது, அன்பின் அடையாளத்துக்கோர், உதாரணம்!

இதுபோன்ற சம்பவங்களை சந்திக்கும் வட்டார சமூகநல அபிவிருத்தி அதிகாரிகள, சர்க்காருக்கு—உண்மையான ரிப்போர்ட் அனுப்பினால், எப்படியிருக்கும்? அதுவே, இது.

*

"எவ்வளவு ஆசையுடன் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்டேன் தெரியுமா? உத்யோகத்தைவிட, அதன் மூலம் செய்யப்போகும் வேலைகளை நினைத்தபோது, ஆனந்தமாயிருந்தது எனக்கு. கிராமங்கள்

பலகோர்ண்ட பிர்க்காவுக்கு நான் அதிகாரி. நீண்ட நாள் காங்கிரசில் இருந்தவன் நான். அந்தத் 'தகுதி'யால்தான், உடனே எனக்கு இந்த வேலை கிடைத்தது. கிடைத்ததே யொழிய என்ன வேலையைச் செய்கிறேன்? கிராமங்கள் சுத்தமாக இருக்கவேண்டும்—புதிய முறையில் சாகுபடி செய்யவேண்டும் — குடிசைத் தொழில்களைக் கற்றுக் கொள்ளவேண்டும் — இப்படிச் சொல்லவேண்டும், மக்களிடம். சொன்னால், எங்கே கேட்கிறார்கள், மக்கள்? 'சோற்றுக்கு வழியுண்டா!' என்ற ஒரே கேள்வியைக் கேட்டுவிட்டு, அவர்கள் வேலையைப் பார்த்துக்கொண்டுபோகிறார்கள் இந்த லட்சணத்தில், எனக்கு தினசரி, விதவிதமான உத்திரவுகள் வந்த வண்ணமேயிருக்கிறது. 'ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி ஜனங்களிடம் எடுத்துச்சொல்லு—கம்யூனிடி திட்டத்தை அமுல் நடத்த இயலுமா"—இதுபோல.

என்னசெய்வது, நான்? சர்க்கார் கூறும் திட்டங்கள், கிராமங்களை சோலைவனமாக்கும்! உண்மை!! ஆனால், எப்படி அவைகளைச் செய்வது? இதோ! இன்னொரு உத்திரவு வந்திருக்கிறது. கிராமத்தின் சுய தேவைகளைப் பூர்த்திசெய்யவேண்டுமாம், நான். ரோடுபோடுவது—பள்ளிக்கூடம் கட்டித்தருவது—மின்சாரம் அமைத்துத்தருவது — இதுபோலப் பல காரியங்களைச் செய்ய வேண்டுமாம். நல்லதுதான்! இவைகள் தேவைதான்!! ஆனால், இந்தக் காரியங்களை நிறைவேற்ற, எனக்கு சர்க்கார் கூறியிருக்கும் யோசனை, என்னதெரியுமா? ஒருகிராமத்துக்கு நல்ல 'ரோடு' போடவேண்டுமென வைத்துக்கொள்ளுங்கள். உடனே, இந்த விஷயத்தை அந்த ஊர் மக்களிடம் தெரிவிக்கவேண்டுமாம்! அவர்களிடம் பாதிப் பணத்தை வசூல்செய்ய வேண்டுமாம் —மீதிப் பணம், சர்க்கார் தருமாம். பிறகு, அந்த ஊர் மக்களையே மண்வெட்டி, கூடையுடன் அழைத்துவரவேண்டுமாம். அவர்களைக்கொண்டே, கிராமத்துக்குத் தேவையான பணிகளைச் செய்துகொள்ளவேண்டுமாம்! இப்படிச் செய்தால்தான், மக்களுக்கு ஒரு விழிப்பு ஏற்படுமாம்!

உண்மைதான்! மக்களைக் கொண்டே இதுபோன்ற காரியங்களைச் செய்யவேண்டுமென்று எனக்கும் ஆசைதான்!! அந்த ஆசையால் தான் பக்கத்தூரில், ஒரு ரோடு போடலாமென, எண்ணினேன். அந்த ஊர் கிராம முனிசீபைப் பார்த்தேன். அவருக்கு என்மீது கொஞ்சம் எரிச்சல்! அடிக்கடி, அவருக்கு கட்டுப்பட்ட ஜனங்கள்மத்தியில், இன்னொரு சர்க்கார் அதிகாரியான நான் போய்ப் பழகிக்கொண்டிருப்பது. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளமுடியுமா? வந்தார், என்னுடன்! ஊரில் பெரிய மிராசுதாரான முத்துகிருஷ்ண ரெட்டியாரைப் போய்ப் பார்த்தோம் — ஒத்துககொண்டார். அடுத்தபடியாக, மேலத்தெரு ஆறுமுக நாயகரிடம் போனோம். அவர் எங்களை, வீட்டுத் திண்ணையின் அருகில்கூட ஏறவிடவில்லை! திகைத்தேன். பிறகு தெரிய வந்தது, அவருக்கும் ரெட்டியாருக்கும், குடும்ப விரோதம் என்பது. நாங்கள் முதலில் ரெட்டியாரைத் தேடிக்கொண்டுபோனதால், இவரை அலட்சியப்படுத்தி விட்டோமாம்! எவ்வளவு சமாதானம் சொல்லியும், கேட்கவில்லை. கடைசியில எப்படியோ, சம்மதிக்க வைத்தோம். இப்படி, தெருவுக்குத் தெரு, வீட்டுக்கு வீடு சென்று, ரோடு போட உதவும்படி கேட்டபோது, ஒவ்வொருவரும் தத்தமது விவகாரங்களைத் தீர்த்து வைக்கும்படி எங்களை நாடினரேயொழிய, யாரும் புதுப் பாதையைப்பற்றி பொருட்படுத்தவில்லை! எப்படியோ, ஒருவாறுக,

நாமும்--அவரும்!

சிந்தை நோகும் செய்திகளை, தினசரி கேள்விப்படுகிறோம், இலங்கையிலிருந்து.

உழைத்து உலரும் உத்தமர்களை, அல்லல்பட வைக்கும் அரும்பணியைச்செய்கிறது, இலங்கைசர்க்கார்.

தென்னாட்டிலிருந்து சென்ற மக்கள், இலங்கைத் தீவிலே நிற்கிறார்கள்—மொழியிலே, கலக்க ! விழியிலே ஏக்கம்! வயிற்றிலே பசி! நெஞ்சிலே வேதனையுடன!

ஆனல், இதோ ஒருவர், இரண்டொரு தினங்களுக்கு முன்பு இந்த 'பாரத' மண்ணிலிருந்து பறந்து சென்றிருக்கிறா—அரசினரின் விருந்தும், அன்பர்களின் கனிவுரையும், ஆனந்த நடனங்களும், பெற்ற வண்ணம்!

இலங்கைக்கு செல்லவே. 'பாஸ்போர்ட்' இல்லாமல், தவிக்கிறோம், நாம். அவரோ, உல்லாசமாகச்சென்றிருக்கிறார் — விருந்தினர் போல, போயிருக்கிறார்.

நம்மனோர் உழைத்தும், நன்றியின்றி, துரத்தப்படுகிறார்கள், இதனை வாய் திறந்தும் கேட்கவில்லை. டில்லி டில்லியின் சார்பில், இலங்கையில் தூதுவராக இருப்பவரோ, அடிக்கடி வந்துபோகிறாரேயொழிய பலனில்லை இதனை காங்கிரஸ்காரரான டாக்டர் வரதராஜுலுவே, சென்னை திருவல்லிக்கேணி இளம் பிறைச் சங்கத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 'இலங்கைத் தூதர், ஒரு தென்னாட்டவராக இருக்கவேண்டும்!' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்.

காங்கிரஸ்காரர்களே கோபப்படுமளவுக்கு நேரு பண்டிதரின்போக்கு இருந்து வருகிறது. இந்த நேரத்தில், வடநாட்டிலிருந்து சென்றிருக்கும் அந்த சுகவாசி, ஆனந்தமாகப் பவனி வந்துக்கொண்டிருக்கிறாராம்! எதற்கு? புது ஆலைகளை அமைப்பதற்கு!!

தென்னாட்டை தொழில் துறையில் அடிமைப்படுத்தி வைத்திருக்கும் பிர்லா, இப்போது இலங்கையில் ஆலைகள் அமைக்கப் போகிறாராம். அதுபற்றி ஆராய, பிர்லாவின் மகன் சுற்றுப்பயணம் நடத்துகிறாராம்.

பல ஆலைகள் அமைக்கத் திட்டமாம்! கோடி ரூபாய்க்குமேல முதலீடாம்!!

நாமும்தான், வெளிநாடு செல்கிறோம்! பிர்லா பரம்பரையுந்தான் போகிறது!!

நாம், உழைத்து வளம் நிறைந்த நாடாக்குகிறோம்—அந்தந்த இடங்களை. பரிசு! சீச்சீ—போ, போ.

சுரண்டச் செல்கிறார், பிர்லா, வரவேற்பு! விருந்து!!

*

ரோடு போடும், வேலையைத் துவக்கினேன். எல்லோரும், மண்வெட்டி கூடை சகிதம், வந்தனர்! பெரிய மிராசுதார்கள், தங்களுக்குப் பதில் ஒரு கூலியாளை அனுப்பியிருந்தனர். பண்டிட்ஜீ படத்தை வைத்து, தேங்காயுடைத்து, ரோடு போடும் விழாவை ஆரம்பித்தோம். மந்திரி கூட வந்திருந்தார்! இந்த சம்பவத்தைப் படம் எடுத்து பத்திரிகைகளில் போடுவதற்காக, சர்க்காரே ஒரு போட்டோ கிராபரை அனுப்பி இருந்தார்கள். வேலை ஆரம்பமாயிற்று! ஒரு மூலையில்:-

“டேய்! மாரியம்மன் கோயில் திருவிழாபோது தேங்காய் மூடியை முதலில் எனக்குக் கொடுக்கக் கூடாதுன்னு, ஆள்சேத்த ஆசாமியில்லே, நீ?”

“ஆமாண்டா! இப்பவும் தான் சொல்லுவேன். ஏதோ, சர்க்கார் வேலேங்கறதாலே, உன்னோடு சேர்ந்து வேலேசெய்றேன். இல்லேன்னு, உன்கிட்டே, வீதியில் போகிற நாய்வருமா?”

“டேய்! பல்லேத்தட்டிக் கையிலே கொடுத்துடுவேன்”

“கொடுடா, பார்ப்போம்!”

அடிதடி! சிலம்பம்! குஸ்தி! வெட்டு!குத்து!கலங்கிப்போனேன். சிறு நேரத்துக்கெல்லாம், ஊரே, இரண்டுக் கட்சியாகிவிட்டது. கடைசியில் போலீஸ் வந்து, நிலைமையை சமாளிக்கவேண்டியதாயிற்று. ரோடு, அப்படியே கிடக்கிறது!

இன்னொரு ஊரில், கீழ்சாதிக்காரர்களும் வருவதால், நாங்கள் வரமுடியாது என்று மறுத்து விட்டனர், மேல் ஜாதிக்காரர்கள்.

அப்பப்ப! கிராமங்களில் காணப்படும், பேதாபேதங்களும், சண்டை சச்சரவுகளும், ஜாதிவித்யாசங்களும் கொஞ்சமா? இந்த இக்கட்டான நிலைமையில், சர்க்கார், எங்களை அவர்களிடம் அனுப்புகிறது! அவர்களை ஒன்று சேர்த்து, பணமும் திரட்டி, பல நல்ல காரியங்களைச் செய்யவேண்டுமாம் நாங்கள்—அதிகாரிகள். சொல்கிறது, சர்க்கார்!

பணம் கேட்பதும், சுலபமாக இல்லை — வாங்குவதும் சுலபமாக இல்லை. அப்படி வாங்கினாலும் வந்தது தொல்லை. நானிருக்கும் பிர்க்காவில் வன்னியர் அதிகமாயிருந்து நானொரு முதலியாராகயிருந்துவிட்டால், வந்தது ஆபத்து! இதுபோல எதற்கெடுத்தாலும், சங்கடமும் சந்தேகமும், துளைக்கின்றன எம்மை.

இந்நிலையில். நன்மைகளைச்செய்ய விரும்பும், சர்க்கார் தன் இஷ்டப்படி இருக்கிற வசதிப்படி, ஏதாவது செய்தால், ‘சர்க்கார் செய்கிறது!’ என்றுவது இருப்பார்கள். அதை விட்டு விட்டு அவர்களுக்கும் உணர்ச்சி வரவேண்டுமாம்! நேரு சர்க்கார் இதையெல்லாம் செய்கிறது, எனும் உணர்ச்சி வரவேண்டுமாம்! அடுத்தத்தேர்தலையொட்டித் தான், இவ்வண்ணம் கூறப்படுகிறது என்பது தெரிகிறது. ஆனால், எதிர்பார்க்கிற உணர்ச்சியா, கிடைக்கிறது; விபரீதமல்லவா, விளைகிறது!

இந்தப் பிரச்னைகளைக் கவனித்துப் பார்க்காமல், இன்னும் 80000 தொண்டர்கள் வேண்டும், அவர்களுக்கு இன்னவிதமாகப் பயிற்சி தரவேண்டும் என்று உதகமண்டலத்தில் கூடியோர் பேசினார்களாம். பணமில்லாது வாய்ப்பந்தல் போட முடியுமா, இந்த நாட்டில்? உதகை மாநாட்டில் ஒரு நிருபர், டேபைக் கேட்டாராம், “சாதிப் பாகுபாடுகளின் காரணமாக, கம்யூனிடி திட்டம் சரிவர நடைபெறுவதில்லையாமே!” என்று. பதிலளித்த டே, மறந்திருக்கிறார்! அவர், ஒருநாள் என் பிர்க்காவுக்கு வந்து பார்த்தால் தெரியும் இப்படியிருக்கிறது சமுதாயம்! இந்த ஆபத்தின் அடிவேரைப் பற்றிக் கவலைப்படாமல், விளையாட்டுப் பந்தயம்—காளைமாட்டுச் சண்டை—இப்படி நடத்தினால், ‘கொண்டாடும்பட்டி’கள்தானே ஏற்படும்? ஏழ்மையும், உயர்சாதிக் கொடுமையும் நிரம்பிய சமூகத்தின் அடிப்படைப் பிரச்னைகளை மறந்துவிட்டு, மாடிகளைக் கட்டச்சொல்லுகிறார்கள். ஐய்யோ! இவர்களுடன் மாரடிப்பதைவிட, சன்யாசம் பெறலாம்போலிருக்கிறது”

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுபித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

‘டில்லி’பற்றி!

“முக்கியமான குறைகளை எடுத்துப் பேசக்கூடமுடிவதில்லை. எப்போதாவது 10 நிமிடம் பேச அவகாசம் கிடைக்கிறது. அந்த நேரத்தில், எதைப்பேசுவது! எத்தனையோ பிரதிநிதிகள் இருக்கும் அங்கே, நேரம் கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது—கிடைக்கும் நேரமோ, போதாமலிருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குத்தான் இந்த 10 நிமிட நேரம் ரேஷன்! சர்க்காரிலிருப்பவர்களோ, மணிக்கணக்கில் பேசுகிறார்கள்—தேவையோ, தேவையில்லையோ, பேசிக்கொண்டேயிருக்கிறார்கள்! அவர்கள் நிலை, அது; எங்கள் நிலை, இது.” —பிராங்க் அந்தோனி

*

“இனிமேற்பட, மக்கள் சபையை ‘லோகசபா’ என்றுதான், அழைப்பார்கள். ‘லோக சபா’ என்றால், தமிழில் உலகசபை என்று பொருளாகும். இப்பெயர், மிகவும் எளிதில் உச்சரிக்கக்கூடிய பெயராகும்! பொருத்தமான பெயருங்கூட!!”

சி. ஆர். நரசிம்மன்
ஆச்சாரியார் மைந்தர்.

*

“தென்னாட்டிலிருந்துசெல்வோர் சில சமயங்களில் ஒன்றும் புரியாமல் விழிக்க வேண்டியிருக்கிறது. வரவர, வட இந்தியப் பிரதிநிதிகள், இந்தியிலேயே பேச ஆரம்பித்து விட்டனர். பிரதிநிதிகள் மட்டுமா? மந்திரிகளே பேசுகிறார்கள்! மந்திரிகளே இப்படிச்செய்கிறார்கள்என்று கவலைப்பட்டால், அவர்களதுதலைவர் பண்டிதநேருவே, சபையில் இந்தியில் பேச ஆரம்பித்துவிடுகிறார்! இந்த நெருக்கடியின் உச்சகட்டமாக இப்போது, மக்கள்சபையை ‘லோகசபா’ வென்றும், பார்லிமெண்டரி காரியாலயத்தை ‘லோகசபா சச்சிவாலயா’ என்றும் மாற்றிவிட்டார்கள்! சபாநாயகர், உதவி சபாநாயகர் பெயர்களையும் மாற்றப்போகிறார்களாம்!! —பி. ராமச்சந்திரரெட்டி (ஆந்திரம்)

"என்ன இருக்கிறது!"

— 2 —

விசித்திரமான இந்த உலகத்தின் மடியிலே, காலப் பறவை, வீசிச் சென்றிருக்கும் மாறுதல்பல! காட்டு மரங்களிலும், மரப்பொந்துகளிலும் அலைந்துகிடந்த மனிதன், இன்று வானத்தை வட்டமிடும் விமானத்தையும் நிமிடத்துக்கோர் ஆராய்ச்சியையும் அள்ளி வழங்கிக்கொண்டே இருக்கிறான். சக்கிமுக்கிக் கற்களால், தீ மூட்டிய நாளல்ல, இது—ஒரு சிறு 'பித்தானை' அமுக்கினால், ஒரு ஊர் முழுமையுமே ஒளிமயமாகிறது. மனிதனின் உள்ளத்தில் மட்டுமல்ல, இதுபோன்ற, எண்ணங்கள் உந்திக் கிளம்பியிருப்பது. ஒவ்வோர் நாட்டின் அமைப்பிலும், முறையிலும், எவ்வளவோ மாறுதல்களைக் காண்கிறோம்! அலைகடல் கிழித்து, உலக நாடுகளையெல்லாம் அதிரவைத்து ரோமாபுரி சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தான், ஜூலியஸ் சீசர். அவனுடைய வெற்றியால், ஐரோப்பாவின் பெரும்பாகமே, ரோமாபுரியின் காலடியில் கிடந்தது. "எவ்வழி சென்றாலும் அவ்வழி ரோமாபுரிக்கே செல்கிறது!" என்று கவிவாணர்கள் போற்றக்கூடிய அளவில் புகழ் பெற்று விளங்கிற்று, ரோம். இன்றுள்ள இங்கிலாந்தும், பிரான்சும், ஜெர்மனியும் போலந்தும், ஸ்பெயினும், எகிப்தும், 'ரோம்' நகரத்திலிருந்து வரும் உத்திரவை எதிர்பார்த்துக் காலம் தள்ளிய காலம் ஒன்றிருந்தது. ஆனால், இன்று! அந்த ரோமாபுரி இல்லை — அதற்கருகே, வெற்றி வீரனை அலெக்சாண்டரை வழங்கியகிரேக்க சாம்ராஜ்யம் பூரித்துக் கிடந்தது— அதுவும் இல்லை; இன்று! அந்த சாம்ராஜ்யங்கள் அழிந்து, மாடமாளிகைகள் மண்மேடுகளாகிவிட்டன. அவ்வளவு தூரம் போவானேன்? 1937ல் ஆக்ஸ்போர்டு கம்பெனியார் வெளியிட்ட 'அட்லாஸ்' புத்தகத்தையும் 1950ல் அதே கம்பெனியில் வெளியிட்ட 'அட்லாசை'யும் எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால், சில ஆண்டுகளில், உலக அமைப்பில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டுள்ளனவென்பதை அறியலாம்! 'உலக முழுமையும் எங்களது சாம்ராஜ்ய சூரியனின் கதிரொளி படாத இடமில்லை!' என்று கர்ஜனை புரிந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் பிரபுக்களின் பிடி, பல இடங்களில் தளர்ந்தது.

ஓயாது முழக்கமிட்ட ஹிட்லரின் ஜெர்மனி, இரண்டாயிற்று. பீரங்கிகள் மோதிக்கொண்டதாலும், கால மாறுதல்களாலும் பல நாடுகள், புதியதாக அரும்பியிருக்கின்றன— பலநாடுகள், உருமாறிப் போயிருக்கின்றன. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு, அமெரிக்கா, இல்லை! அந்தப் பூமியை, ஸ்பெயின் தேசத்தார் கண்டுபிடித்த பிறகு, ஐரோப்பியர் பலர் வேடிக்கையாகக் குடியேறலாயினர். இன்று! அமெரிக்கா, உலகப் படத்தில், ஒரு தேசமானது மட்டுமல்ல, உலகத்தையே ஆட்டிவைக்கக் கூடிய அளவுக்கு, வளர்ந்திருக்கிறது.

ஆஸ்திரேலியா — நமக்கு, சமீப காலம்வரையில் 'அந்தமான்' தீவு இருந்ததுபோல, இங்கிலீஷ்காரர்களின் 'அந்தமான்' கடுந்தண்டனை பெற்றோரைக் கொண்டுவிடும் இடமாக இருந்தது! இன்று, அந்த ஆஸ்திரேலியா...? இதேபோல உலகப் படத்தை எடுத்துக் கொண்டுபார்த்தால், பல அரசுகள் மாறி புது அரசுகள் ஏற்படுவதுபோல பல நாடுகள் மாறி புதுநாடுகள் பல உண்டாகியிருக்கின்றன! பழைய எல்லைகள் மாற்றப்பட்டு புதுஎல்லைகளும் கூட வரையறுக்கப்பட்டிருக்கின்றன!! இந்திய உபகண்டத்தில், வெளிநாட்டான் அடியெடுத்து வைக்குமுன், இருந்த ராஜ்யங்கள் ஏராளம் —சேர, சோழ, பாண்டியர் —விஜயநகரம், பாமினி — குறுநில மன்னர்கள்—அவந்தி, காந்தாரம், உஜ்ஜயினி — இப்படியிருந்த ராஜ்யங்கள் ஏராளம். ஆனால், பிறகு! அவையாவும் அழிந்து, இந்தியா, உருவாயிற்று. அந்த இந்தியா துண்டிக்கப்பட்டு, பர்மா பிரிந்தது — பிறகு, பாகிஸ்தான் ஏற்பட்டது. இன்னும் சில ஆண்டுகளில் இந்தியா, என்கிற பெயரே மறைந்து, 'பாரத்'வந்து விடும் எனத் தெரிகிறது! இதுபோல நாடுகளின் பெயர்கள், மாறுவதும், புது நாடுகள் பல பூப்பதும், கால ஓட்டத்திலே அதிசயமல்ல. பாலஸ்தீனத்திலே, பத்து ஆண்டுகளுக்குமுன்பு, இஸ்ரேல் எனும் அரசு இல்லை! அங்கிருந்த யூத மக்கள், 'இஸ்ரேல்!—அது எங்கள் புனித ராஜ்யம்' என்று உதட்டளவில்தான் உச்சரித்துக்கொண்டிருந்தனர். இன்று, இஸ்ரேல், ஒரு ராஜ்யம்! பாகிஸ்தான் — பழைய பெயரல்ல—புதிதாகவைத்தபெயர். நாடு, இருக்கிறது! வாழ்கிறது!! இதனை மறந்துவிடுகின்றனர், நமது கோரிக்கையைக் கண்டு குமுறும் தோழர்கள். என்ன இருக்கிறதாம்!—கேட்கின்றனர். எவ்வளவோ, இருக்கிறது! — ரோமாபுரி சாம்ராஜ்யம், சீர்பெற்றுவிளங்கி, பிறகு சிதைவுற்றபோது இரண்டாகப்பிரிந்தது. மேற்கே, ரோமாபுரி! கிழக்கே பைஸாண்டைன் சாம்ராஜ்யம்!! இவ்வண்ணம் இரண்டும் பிரிந்தபோதும் சரி, பிறகு வீழ்ந்தபோதும் சரி ஏற்பட்ட சரித நிகழ்ச்சிகள் சாமான்யமல்ல. அருப்பிய கிருஸ்துவமதமும் பிறகு தோன்றிய இஸ்லாமும் அங்கே மோதிக்கொண்டன! அந்த மோதுதலால், பல அரசுகள் அமைந்தன—பல சாய்ந்தன. இந்த உண்மைகளை அறிவோர், புது நாடுகள் ஏற்படுவதைப்பற்றி, பொருமுதலோடு பேசமாட்டார்கள். கால ஓட்டம்! அடிமைப்பட்டுக்கிடந்த மக்களின் எழுச்சி! விடுதலைகொண்ட சமூகம்! இவைகளின் சக்தியையும் வலிவையும் ஓட்டி புது அரசுகள், மலர்கின்றன — வாழுகின்றன. இந்த உண்மையை மறந்துவிட்டு, "திராவிட நாடாமே! என்ன இருக்கிறது, இதில்?", என்று கேட்கிறார்கள். புதிதாக ஓர் அரசு அமைவது, ஆபத்து!—என்று அலறுகிறார்கள். அவர்களுக்கெல்லாம் அண்மையில் இந்திய முதலமைச்சர் பண்டித நேரு, பாராளுமன்றத்தில், அழகாகக் குறிப்பிட்டார். "உலகப்படம், எப்போதும் ஒரேமாதிரியாக இருந்ததில்லை. இந்தியாவின் நிலப்படம், பிரிட்டிஷ்காரர் வந்ததால் எவ்வளவோ மாற்றங்கள் அடைந்தது." என்பதாக. இதனையே, நாமும்அடிக்கடிச் சுட்டிக்காட்டி வருகிறோம்.

★ அவரது இலட்சணம்! ★

[மேடை-சிதம்பரனார்]

"உழவன்"

நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

மாந்தர்க்கு, இனத்து இயல்பது ஆகும் அறிவு—மக்களுக்குத் தாம் சேர்ந்த இனத்தின் தன்மையதாகும் அறிவானது, நிலத்து இயல்பால் நீர் திரிந்து அற்று ஆகும்—நிலத்தின் தன்மையால் நீரின் தன்மை மாறுபடுவதை ஒக்கும் என்பதாம்.

வானிலிருந்து வருவது தூய்மையான நீராகவிருப்பினும் செந்நிலம், கரிசல், வெள்ளைக்களர்போன்று நிலத்தியல்பால் உப்புநீர், உவர்நீர், நச்சல் நீர் என்று நீரின் சுவையும் மாறுபடுகிறதல்லவா? அவைபோன்று, மக்கட்கு இயற்கையான அறிவுத்தூய்மை இருப்பினும், பெரும்பாலும் தாம் சேர்ந்து வாழும் இனம், சுற்றுச் சார்புகளின் பழக்க வழக்கங்களைப்போன்றே மக்களின் அறிவுத்தன்மையும் மாறிவிடும் என்பது கருத்து.

கிரேக்கம்:- கடல் கிழித்தோடும் கப்பற்கூட்டங்கள், காவல் செய்துவரும் படை வீரர்களின் அணிவகுப்புகள், சரித்திர வரலாறுகள்; கலைச்சாரங்கள், மதகுருமார்களின் திருவனங்கள் என ஐரோப்பிய நாடுகட்கெல்லாம் முதலிடம் பெற்றுவந்தது கிரேக்க (கிரீஸ்) நாடு. ஆனால், ஆண்டான் அடிமை வாழ்வு ஆட்சியாளரின் குதூகல வாழ்வு. மக்களை மடைமைக் குழியிலாழ்த்தும் மதவெறி, அவைகள் மீதெழுந்த ஆபாச மூட நம்பிக்கைச் சடங்குகள், அவற்றை ஆதரித்து வரும் அரசாங்கமுமாயிருந்து வந்தது.

சாக்கர்டீஸ்:- இந்த மூடப்பழக்க வழக்கங்களை மக்கள் மனதிலிருந்து கல்லியெறியாவிடில் நாடு ஒருபொழுதும் முன்னேறாதென உணர்ந்த சாக்கர்டீஸ் தனது புதுமைக் கருத்துக்களை மக்களிடையே விளக்கிப் பேசத் தொடங்கினான். நிகழ்ந்ததென்ன? மதகுருமார்களும் ஆட்சியாளர்களும் விசாரித்துச்சாக்கர்டீசை "விஷம்" கொடுத்துக் கொன்றுவிடுமாறு தீர்ப்பளித்தனர்.

ஒரு மகாசிரியனாகவோ, கடவுள் அவதாரமாகவோ சாக்கர்டீஸ் தோன்றியிருந்தால் (கல் தெப்பமாயிற்று, எலும்பு பெண்ணாயிற்று, செங்கல் தங்கக்கல் ஆயிற்று என்ற புராணக் கூற்றுகள்போல்) விஷம் அமிழ்தமாயிருக்கும். ஆனால் ஒரு பகுத்தறிவு வாதியாய்த் தோன்றினான், மனச்சான்றை ஆணையாளர் சொல்லுக்கோ, சுயநலத்தின் பொருட்டோ, உயிரின் பொருட்டோ, அடகு வைக்க மறுத்தான். நஞ்சு கொல்லுமென்று தெரிந்தே "பெயக்கண்டும் நஞ்சுண்டு" உயிர் துறந்தான் சாக்கர்டீஸ் அன்று முதல் இன்றளவும் ஒரு முகவரி தெரியாத நாடாகத்தான் கிரேக்கம் வாழ்ந்துவருகிறது.

துருக்கி:- ஐரோப்பாவின் நோயாளியெனக் கிடந்த துருக்கியில் கமால் தோன்றினான். ஆட்சிப் பொறுப்பும் அவன்கையிலிருந்தது. பகுத்தறிவு வீரனாய் பேசினான். நாட்டிற் சூழ்ந்துகிடந்த மூடப் பழக்க வழக்கங்களை முறியடித்தான். மக்களைக் கட்டாய முறையில் படிக்கவைத்தான். படுதா மறைவிற் கிடந்த ஆயிரம் பெண்மணிகளை சட்டசபை மெம்பர்களாகவும் அதிகாரிகளாகவும் அமரச் செய்தான். இன்று தன்னாட்டைவிட 15மடங்கு ஜனத்தொகையும் நிலப்பரப்பையும் கொண்ட அண்மை நாடான உருசியாவின் அச்சுறுத்தலையும் பொருட்படுத்தாது உலக முன்னேற்ற நாடுகளில் ஒன்றாக நிமிர்ந்து நிற்கிறது துருக்கி.

ஆப்கன்:- இதனைப்பின்பற்றி அமானுல்லா தனது நாட்டில் பேசினான், பேச்சைச் செயல்படுத்த முனைந்தான். ஆனால் மத மூடநம்பிக்கைகள் சூழ்ந்து முற்றுகையிட்டன. நிகழ்ந்ததென்ன? முயற்சித்தான் பலிக்கவில்லை. பலிக்கும் எனத் தோன்றவில்லை. தனது தலைமைப் பதவியை மதித்து, அப்பேயாட்சிக் கூடாரத்துள் பலிக்கும் நாளை எதிர்பார்த்து வளைந்து கொடுத்து வாழ முடியுமா? ஒரு வீரன். பதவியை வீசியெறிந்துவிட்டு வெளியேறினான், அமானுல்லா. நாடு பழைய இருளைவிட்டு இன்னும் நீங்கியபாடில்லை.

ஏன் இவைகளை எல்லாமிழுக்கிறோமென்றால், உலகில், அமெரிக்காவோ, உருசியாவோ, பிரிட்டனோ எந்தெந்த நாடுகள் முதலாவதாக அரசியல் கட்சியே முனைந்து மூட நம்பிக்கைகளை ஒழித்து மக்களை அறிவாளிகளாக்கிற்றோ, அந்தந்த நாடுகள்தான் இன்று வல்லரசுகளாக முன்வரிசையில் நிற்கக் காண்கிறோம். இது யாம் கூறுவதல்ல, சரித்திரம் கூறும் வரலாறுகள். இனி நம் நாடு நோக்குவோம்.

நேருஜி பேசுகிறார்:- "அச்சத்தால் ஆண்டவன் தோன்றினான்."

முன்பக்கத் தொடர்ச்சி

ஆனால், அதனைக் கேட்கும்போது, புலியாகும் நண்பர்களுக்குக் கூறுகிறோம். பண்டிதர், கூறுகிறார்! உலகப் படம், மாறும்—என்பதாக. உணருங்கள் இதனை! மாறுதல்கள் நிகழ்ந்துவரும், உலகில், பேராசையின்றி, தம்முடைய சொந்த நாட்டைச் சுதந்திரக்குடியரசாக்க விரும்பும், எங்கள் மீது காய்கின்றனரே—ஏன்? ஏற்படக்கூடாதா, திராவிட அரசு! இதுபோன்ற தனியரசுகள் ஏற்பட்டதில்லையா; உலக அரங்கில்! எண்ணிப் பாருங்கள்.

"எனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லை."

"கற்சிலையைக் கும்பிடமாட்டேன்."

"கடவுளைப்பற்றிக் கவலை இல்லை."

"மந்திர ஜெபங்களால் அல்ல. முயற்சியால்தான் சாதனைகளைப் பெறமுடியும்."

"மத மூடநம்பிக்கைகளை அரசியலிற் சேர்த்துக் குழப்பினால், அரசியல தாம் தாழ்ந்து அனர்த்தத்தைத் தேடிக்கொள்ளும்."

"சோதிடம் நம்பத் தகுந்ததல்ல. நாளும் கோளும் ஒன்றும் செய்துவிட முடியாது"

"கங்கையில் முழுகினால் மட்டும் பாவம் போய்விடாது"

"சாதிக்கள் என்ற பெயரால் இலட்சக்கணக்கில் மக்களை ஏய்த்து வாழ்கிறார்கள் இந்நாட்டில்"

"ஆன்மார்த்தத் துறையில் நம் நாடு முன்னேறியுள்ளதாகச் சொல்லிக்கொள்வதெல்லாம் பிற்போக்குத்தனத்தை மறைத்துக்கொள்ளவே யாகும்"

"ஆன்மார்த்தத் துறையிலுள்ள மூடநம்பிக்கைகளைப் போன்று பொருளாதாரத் துறையிலும் உண்டு"

"ராமாயணப் போர் (இராமாயணம்) என வருணிப்பதெல்லாம் அந்நாளைய ஆரியர் திராவிடர் சண்டை"

"நாட்டிலுள்ள மூடநம்பிக்கைகளை முறியடிக்கத் தாண்டன்ஜி போன்றவர்கள் முன்வரவேண்டும்"

இவ்வாறு பற்பல சமயங்களிற் பற்பல பேச்சுகள் எழுத்துக்கள் ஆதாரவுடன் காட்டமுடியும். அவரது அறிவாற்றலின் ஆராய்ச்சிக்கும் தகுதிக்கும் ஏற்ற கருத்துக்கதிர்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இப்பேச்சுக்களில் இம்மியளவு நாட்டிற் பிரதிபலிக்கின்றனவா? செயல்படுத்தப்படுகின்றனவா? படுமா! நாடு ஒருபுறமிருக்கட்டும், நேருஜி அவர்கள் காந்தியாரின் வாரிசாக இருந்து கட்சியைக் கட்டிக்காத்து உயிர்ப்பிச்சையளித்து ஓம்பிவருகிறார். கட்சியும், எங்கள் ஒப்பற்ற தலைவர் மனிதருள் மாணிக்கம், உலக சமாதான வீரர். அவராற்றான் இந்தியா அகில உலகில் மதிப்புப்பெறுகிறது. என்றெல்லாம் புகழ்ந்து போற்றுகிறது. நிலவரம் என்ன?

*

ஒரு அரசன் தனது மந்திரியை அழைத்து நம் நாட்டிலுள்ள முட்டாள்களையெல்லாம் கணக்கெடுக்கலாம என எண்ணுகிறேன் என்றான்.

மந்திரி: தாங்கள் எண்ணியபடி ஏற்கனவே கணக்கெடுத்து வைத்திருக்கிறேன்.

அரசன்: அப்படியா? யாரை முதற்காலததில் எழுதியிருக்கிறாய்.

ம: சமூகத்தைத்தான் முதலிடத்தில் எழுதிவைத்திருக்கிறேன்.

அ: என்ன? காரணம் சொல்லத்தக் கொள்கிறேன்.

ம: முன்பின் பழக்கமின்றி யாதொரு சாமீனுமின்றி அடை

S. P. T.

சங்கரன் முன்னேற்ற தனிப் பயிற்சிக் கூடம்

SANKARAN PROGRESSIVE TUTORIALS

கருணாநிதி பார்க் தெப்பக்குளம் P. O. திருச்சி

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி, எஞ்சினீயரிங் பரீட்சைகளுக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

ஆரம்பம் 9—6—54

மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதில் திறமையும் அனுபவமும் மிக்க பேராசிரியர்கள் உள்ளனர்.

STAFF

Mr. N. J. தேவதாஸ் M. A	,, A. பாலசுப்ரமணியம் B. Sc.
Mrs. ஜுடித்லூயிஸ் B A (Hons)	Mr. D. A. சாமி (விஷாரத்)
Mr. I திவ்வியநாதன் B. A. (Hons)	வித்வான் சோழகர்
,, வெங்கட்ராமன் M. A. L. T.	Mr. K. ஜான் B. A.
,, N. பிச்சை B. A (Hons)	,, லூயிஸ்பீட்டர் B. A.
,, M. வெங்கட்டராமன் M. A. B. Com.	,, R. சுப்ரமணியன் B. A.
,, N. S. கிருஷ்ணசாமி M. A.	Mr. C. சாமி B. A.
,, V. துரைராஜ் B. Sc. B. T.	எஞ்சினீயரிங்
,, R. ஜான்சன் B. A. B. T. Dip in geo	Mr. M. பாலகிருஷ்ணன் B. E.
,, G. ரத்தினம் B. Sc.	,, M. R. நடராசன் B. E.
	,, P. சங்கரன் B. E.

Mrs. ஜுடித்லூயிஸ் B. A. (Hons)
கோவை அரசினர் கல்லூரி
முன்னாள் ஆங்கிலப் பேராசிரியர்
வைஸ் பிரின்ஸிபால்.

Mr. N. J. தேவதாஸ் M. A.,
திருச்சி நகரில தனிப்பயிற்சிக்
கூடங்களை நிறுவியவர்களில்
முதன்மையானவர்,
பிரின்ஸிபால்

அலுவலகம்:
16, நந்திகோவில் தெரு
தெப்பகுளம் P. O. திருச்சி

I. திவ்வியநாதன் B. A. (Hons)
செயலாளர்.

விபரங்களுக்கு நாலணா ஸ்டாம்புடன் கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்.

செயலாளர், சங்கரன் முன்னேற்ற தனிப்பயிற்சிக் கூடம்
தெப்பக்குளம் P. O. திருச்சி.

யாளம் தெரியாத ஒரு அயல் நாட்டானிடம், குதிரைகள் வாங்கியனுப்புமாறு 50 ஆயிரம் பொன்னை அள்ளி அவனுக்குத் தருமாறு ஆணையிட்டீர்களல்லவா, அப்போதே முதற் கலத்தில் எழுதி வைத்தேன்.

அ: அவன் சொன்னபடியே குதிரைகள் கொணர்ந்து விட்டாலோ?

ம: அங்ஙனம் கொணர்ந்தால் அவனை இரண்டாவது கலத்திலெழுதி விடுகிறேன் என்று பதிலளித்தானாம்.

இக்கதைக்குச் சான்று தேடினால் எங்கும் கிடைக்காது. ஒரேயடியாக இந்தியா வரவேண்டும். வந்தாலும் ஏற்றுமதி இறக்குமதி நடக்கும் கப்பல் துறைமுகங்களிலா? சரக்குகள் மீது பணம் கொடுக்கும் தரகு கடைகளிலா? இலாபாதாயம் செய்து வரும் வட்டிக்கடைகளிலா? ஏனைய பண்டமாற்று வாணிகத் துறையிலா? எங்கும் காணமுடியாது. காங்கிரச அரசியல் துறையில் நுழைந்தால், கால் இடறினாலும் கூட இக்கதைகள் மீதுதான் இடறவேண்டும்.

*

லண்டனில் இந்திய தூதராலயம் ஒன்றுண்டு. ஆண்டொன்றுக்கு 48 இலட்சம் செலவு கணக்கெழுதி வருகிறது. அது பற்றி பொய்க் கணக்கு, கையாடல், இரட்டைக் கணக்கு என்றெல்லாம் ஆடிட் ரிப்போர்ட் வெளிவந்ததாக 1950-லே இந்தலண்டன் டைம்ஸ் வெளியிட்டது. அதெப்படியோ இருக்கட்டும், இதர விவகாரம். சென்ற வாரத்தில் சுதேசமித்திரனில் வெளியானதை நீங்கள் படித்திருப்பீர்கள்? (23-4-54) இந்திய தூதராலயத்திற்கு ஒரு வீடு வேண்டுமென்று லண்டனிலுள்ள ஒரு போலிக் கம்பெனியிடம் ரூ 2,27000 அள்ளிக் கொடுக்கனராம். அட்வான்ஸ் வாங்கிய கம்பெனியின் மூலதனம் ரூ. 27 தானும், பணத்துடன் அக்கம்பெனி கம்பி நீட்டியது. "திடுக்கிடும் சம்பவம்" என்று டில்லி ராஜாங்க சபையில் பண்டித குன்ஸ்ரு தெரிவித்துள்ளார். இது ஒன்றே போதும் சான்று.

1953,ல் லண்டனிலிருந்து 50 ஆயிரம் கம்பளி ராணுவத்துக் கனுப்பினார்கள். இவைகள் முன்பே உபயோகப்படுத்தியவைகள் என்று ராணுவம் மறுத்தன. ஒ புக்கெள்ளும்படி எழுதினார்கள். கம்பெனி மறுத்துவிட்டது. ஸ்தானிகரோ, எவனிடம் புதியவைகள்தான் காட்டப்பட்டன. அனுப்பும்போது ஏமாற்றிவிட்டார்கள் எனப் பதிலளித்தார். பின்பு அவைகளை ஏலம் விடப்பட்ட வகையில் நட்டம் ரூ. 1 34,699.

1951ல் மேயார் திட்டம் என்றால் எல்லார்க்கும் தெரியும். வைகாசா கழிவு நீரைப் பயன்படுத்தி மின்சார திட்டம். பிரிட்டனிலிருந்து இயந்திரம் வந்ததாம் 1½ ஆண்டுக்கு முன்பே. "ஆலோசனைக் கமிட்டிகள்", "ஒர்க்கிங் கமிட்டிகள்" எல்லாருமாய்ச் சேர்ந்து எடுத்து நிறுத்தி தண்ணீர் திறந்துவிடும் நிலையில் இயக்குமுடி (வால்வு) இயந்திரத்துடன் வரவில்லையென்று தெரிந்ததாம். அதன்பின் பிரிட்டனுக்கு விமானமூலம் அனுப்புமாறு தகவல் தெரிவிக்கப்பட்டதாம்.

பற்றுக் குறைக்கு அமெரிக்காவில் சென்று கடலிற் கொட்டும் கோதுமைக்குக் கடன்பட்டதன்றி 360 இயந்திரக் கலப்பைகள் வாங்கியதில் ஒன்றுக்கும் பயன்படாது இயங்கின் கோளாங்கட்டிக் கற்கள் போன்றாகும்கிடக்கிறதாம். இதனால் 2½ கோடி நஷ்டம் என முன்பே எழுதினோம். மேலும் மத்திய இயந்திரக் கலப்பை நிறுவனத்தில் "துளிகூட முன்யோசனையில்லாது, விவேகமில்லாது" ஸ்டோர் சாமான்கள், டிராக்டர்கள் சேம நடத்தினரும் பருவவும். இதனால் ஒரு கோடி நஷ்டமடைந்ததச் செலவென்றும் நிலமீட்சியில் ஏக்கர் ஒன்றுக்கு 40-லிருந்து 54-வரை அக்கிரமமாய் விவசாயிகள் மீது சுமக்கப்படுகிறதென்றும் இவைகளின் பொறுப்பாளிகளான அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கமிட்டி கூறுவதாய் 12—5—54-ல் சுதேசமித்திரனில் வெளிவந்துள்ளது.

இவைகள் போன்று நூற்றுக் கணக்கில் எழுதிக்கொண்டே போகலாம். மேலும் "நீயாளத் தகுதியுள்ளவனல்ல. உனது சாண்டலாட்சியில் நாடு குட்டிச்சுவராயிற்று. நீ வெளியேறு" என யாரை விரட்டியடித்தோமோ? அதே நாட்டில், அவர்கள் தலைநகரில், இத்தகைய முட்டாள்தனங்களுக்கு முதலிடம் பிடிக்கும் வேலை தொடர்ந்து நடைபெறுமானால், அவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களென்றுவது எண்ண வேண்டாமா? இந்த ஆளும் கட்சியைத்தான் தேர்ந்தெடுக்கிறார்களோ நாட்டு மக்கள் என்றால், மந்திரி சொன்னதுபோல் அவர்களை இரண்டாவது கலத்தில் எழுதவேண்டியதுதான்.

*

இந்து சட்டத் தொகுப்பு மசோதா ராவ் கமிட்டியால் உருவபடுத்தி 1944-ல் மன்றம் ஏறிற்று. 1948-ல் அரசியல் நிர்ணய சபையால் தனிக்கமிட்டிக்கனுப்பி அதன் 'ரிப்போர்டை" 1949-ல் பார்லிமெண்டு விவாதித்தது. நாடு முழுதும் ஏனைய கட்சிகளும் ஆதரித்தன. நேருஜி அவர்களும் இம்மசோதாவை நிறைவேற்றுவதில் அரசியல் துறவ (ராஜிநாமா) பூணுவேன் எனக் கூறுரைத்தனர். என்றாலும் வைதிக மூடநம்பிக்கைகள் வரிந்துகட்டி எதிர்த்தன. வெற்றியுங் கண்டன. குழுமை சரிந்தது. 1951-ல் மசோதா கைவிடப்பட்டது.

நேருஜி தனது சூழ்ச்சியைப் பயனில் சொல்லாமலா வெளியேறியிருப்பின் அன்றே காங்கிரசாட்சி கவிழ்ந்துவிடுமே என்பதை எண்ணினார்களா? அல்லது நமது போற்றுதற்குரிய தலைவருக்கு காமே மதிப்புத் தராவிடில் வெளிநாட்டார் என்ன மதிப்பார்கள் என்றுவது எண்ணினார்களா? அல்லது மசோதாவில்தான் அப்படி என்ன நாடு மூழ்கிப் போய்விடும் படியான காரியங்கள் இருந்தன?

நேருஜியாவது, சமூகைப் பின்பற்றுவதோ, அமானுல்லாவைப் பின்பற்றுவதோ தன்னால் இயலாதெனின், "நிறைமிகு செல்லுற சொல்லை" என்பதையாவது சிந்தித்திருக்கலாம். யாதொன்றையும் எண்ணாது, முழு மூடநம்பிக்கைக் கூடாரத்தின் முதல்வராயிருப்பதின் பொருள் என்ன?

(12-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரில் ஈடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!!

திராவிடநாடு

காஞ்சி] 6—6—54 [ஞாயிறு

மாடப்புறா—வேடன் கையில்!

★

விமானத்திலிருந்து இறங்கிய போது, மந்திரியாக இருந்தார்! வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததும் 'கைதி' ஆக்கப்பட்டார்!!

*

திகைக்கிறது, நாடு.

அதிசயிக்கிறது, உலகம்.

வதந்திகள் பரவுகின்றன.

கிலி, கொள்கின்றனர், மக்கள்.

•

நூற்றுக்கணக்கில் கைது.

பத்திரிகாசிரியர்கள் சிறையில்.

வாய்ப்பூட்டு சட்டம்.

ராணுவம், சேர்ந்து வருகிறது.

*

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வரும் செய்திகள், ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் அள்ளி வழங்குகின்றன.

சின்னாட்களுக்கு முன்புதான், அரசு அமைத்தார், பஸ்லுல் ஹக். இன்று, அவர், வீட்டிலே கைதி! அவருடைய மந்திரிசபை டிஸ்மிஸ்! பலர் கைது!!

செல்வாக்கும் சிறப்பும் பெற்ற முஸ்லீம் லீகை முறியடித்து வெற்றிக்கொடி நாட்டினர், பழைய முஸ்லீம் தலைவர்கள். அந்த வெற்றி, பாகிஸ்தான் மத்ய பீடத்தை, அதிரச்செய்தது! அதிர்ச்சியின், விளைவு, இன்று—இதோ—கிழ் பாகிஸ்தானில்!!

மத்யபீடத்தை ஆள்வது, லீக். மாகாண பீடத்தை அலங்கரிப்பது, எதிர்க்கட்சி. இரண்டும், எப்படி ஒத்துப் போகமுடியும்? — கேட்டனர், பலர். பதில், இதோ, கிடைத்திருக்கிறது.

*

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிசபையை, குற்றம் சாட்டுகிறார், முகம்மது அலி. அதனாலேயே, டிஸ்மிஸ் செய்துவிட்டதாக, அறிவிக்கிறார்! அவரது பிரசங்கத்தில், விவேகத்தைவிட, வீரம் கொப்பளிக்கிறது!! அந்த வீரம், மாற்றாருடன் போரிடும் போது உற்றாரை மகிழச் செய்யும்—ஆனால் இப்போது எழும்புகிறது! சிந்திக்கத் தூண்டும். எவரையும்.

முகம்மது அலி, வங்கம் தந்த வீரர். பச்சைக் கொடிக்காக பாடுபட்ட தீரர். விடுதலை முழக்கம் செய்தபோது, மகிழாத மக்கள், இல்லை! அக்கிரமங்களை அழிக்க வேண்டுமென அவரிட்ட கர்ஜனையைக் கேட்டு, மனமகிழ்ந்தனர், மக்கள்! இன்று, அந்த வீரன், கலக்குகிறார் — மாற்றார்மீது அல்ல; தனது மக்கள்மீது. அனலைப் பொழிகிறார். எதிரிகள்மீதல்ல; தன்னாட்டவர் மீது.

அரசியல் வாழ்வில், இத்தகைய நிலைமை, ஏற்படுவதன் அறிகுறி, எதிர்காலம் எங்கேயோ சென்று கொண்டிருப்பதையே குறிக்கும்! அது தென்படுகிறது, பாகிஸ்தானில்!! அஞ்சுகிறோம்.

*

பஸ்லுல் ஹக்-கின் அரசியல் வாழ்வைப்பற்றி பற்பல சொல்லுவர். அவர் வழுவின் சிகரமோ, உண்மையை மறுக்கும் உறுதி கொண்டவரோ, எதுவாயினும், இப்போது முகம்மதலி செய்த முடிவால், விபரீதத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறாரே யொழிய, வேறில்லை. "பஞ்சாபிலும் முன்பு இதுபோலத்தான் டிஸ்மிஸ் செய்தோம்! சிந்துவிலும் செய்துகாட்டியிருக்கிறோம்! அங்கெல்லாம் ஆட்சி புரிந்தது, எங்கள் கட்சியாகிய லீக் தான். எனினும் செய்தோம்", என்று அலி, விளக்கம் தந்திருக்கிறார். விளக்கம்; விபரீதம் வளர்வதின் வீபரீதத்தைத்தான் தருகிறதே யொழிய அரும்பிய புது நாட்டின் முன்னேற்றத்தைக் குறிக்கவில்லை! ஆபத்தன்றோ, இது? அடிக்கடி செய்திருக்கிறோம்—என்றால், அறிவுள்ளம் கொண்டோர், அகமகிழ்வரோ, அந்த ஆட்சிகேட்டு. எதிர்த்துப் பேசியோரையெல்லாம், 'போ, வெளியே!' என்று துரத்திக் கொண்டிருந்தால், தவழும் நாடு, தத்தளிக்குமே தவிர, சங்கடமின்றி இருப்பதாகவா எண்ணுவர், வெளியார்! விபத்தும் ஆபத்தும் சூழ்கிறது ஆட்சியை எனப்பொருள்.

பாகிஸ்தான் பீடத்தில், முகம்மது அலிக்கு முன்பு வீற்றிருந்தோர், பழம் பெருந் தலைவர்கள்! புதுநாடு காண வாழ்வையும் உழைப்பையும் ரத்தம் செய்தோர்!!— அவ்வளவு சிறப்புமிக்க தலைவர்களின் மறைவுக்குப்பின் மண்டலம் ஆள முன்வந்த முகம்மது அலி, மக்கள் மனதில் இடம்பெறும் காரியங்களைச் செய்யவில்லை. மாறாக, அதிருப்திப் பாதையை, அகலமாக்கினார்! விளைவு விபரீதமாகியிருக்கிறது.

•

மாடப்புறா, கனிக்கிளையின் அமர்ந்திருக்கும்போது, அகமகிழ்வர், மக்கள் — சில சமயங்களில், வேடன் வலைக்கும், விருந்தாகநேரிடுகிறது. அப்போது அகமகிழ்ச்சியல்ல, அச்சமே உருவாகிறது!

இந்த அச்சத்தைத் தவிர்க்க வேண்டும் என்ற ஆசையினாலேயே, ஆண்டுகள் பல முயன்று, அரிய கோட்பாடுகளை வழங்கினர், அறி

ஞர்கள். அதில் சிறந்தது தான், ஜனநாயகம்! இந்த மாடப்புறா, சில வேளைகளில், வேடர்களின் கையில் அகப்பட்டுவிடுகிறது. கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சிதரக்கூடிய அப்புறா, வேடனின் வயிற்றுக்கு விருந்தாகிவிடுகிறது!

இந்த வேடர்கள் இன்று, விடுதலை அடைந்த ஆசிய நாடுகளில், அதிகமாகிவருகிறார்கள். அவர்களின் பட்டியலில், பாகிஸ்தான் பிரதமரும் சேர்ந்திருக்கிறார்!

அரசிடம், பீரங்கி உண்டு—அதனால், பிணமாக்கலாம், எதிரிகளை! ஆனால், பலன்—நாடு, காடாகுமேயொழிய, இன்பம் அரும்பாது.

அதிலும், புதுவாழ்வு பெற்றுப் பூக்கும் அரசுகளுக்கு, பீரங்கிகளைவிட அன்பு எனும் அஸ்திரமே வலிவுள்ளதாகும். அந்த அஸ்திரத்தை அரசியல் அதிகாரம் எனும் போதை மறைத்துவிடுகிறது! அதனால்தான், ஆருயிர்த் தோழன் அப்துல்லாவைச் சிறையில் வைத்துப் பார்க்க ஒத்துழைத்தார், பண்டித நேரு!!

கண்ணீர் வருமாம், பிறர்படும் கஷ்டம் கண்டால் அவ்வளவு ஈர உள்ளம் படைத்தவராயிருந்தவர் பண்டிதர். ஆனால், இன்று! மரத்துப்போயிருக்கிறது, இதயம். அன்புக்குப் பதில், பீரங்கியை நம்புகிறார்! புறாவை வீழ்த்தும் வேடனாகிறார்!! இதே போக்கில், பாகிஸ்தான் அலியாரின் நிலையும் செல்வதற்கு வருந்துகிறோம். வெள்ளையனை விரட்டி புதுநாடுகள் கண்டனர்! ஆனால், அவன் விட்டுச்சென்ற 92-Aவை வீசி, புறாக்களை வதைக்கின்றனர்!!

*

கிழக்கே ஒரு நாடு! மேற்கே ஒரு நாடு!! இடையில், தூரம் அதிகம். எனினும் இரு பகுதிகளிலும் வாழ்வோர் ஒரே மதத்தவர் எனும் காரணத்தால், இரண்டையும் ஒன்றாக்கி புது நாடு அமைந்தபோது, அதிசயம், என்றனர், உலகோர். கராச்சி தலைநகர்! கிழக்கே டாக்கா தலைநகர்! மேற்கு பாகிஸ்தானைவிட, பலவிதத்தில் செழிப்புள்ளது, கிழக்குப் பிரதேசம். கராச்சியில் மத்திய சர்க்கார்! டாக்காவில் மாகாண சர்க்கார்!! இப்போது மத்திய அரசு, மாகாண சர்க்காரை விரட்டியடித்துவிட்டு, கவர்னரின் ஆட்சியைப் பிரகடனம்செய்திருக்கிறது! பதவி யேற்றிருக்கும் கவர்னர், ராணுவத் தளபதியாம்!! புதியவரை அனுப்பி புது நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார், முகம்மது அலி. கைது செய்வதும், பத்திரிகைகளின் வாயைப் பூட்டுவதும் அதிகாரம் ஏந்தியவருக்கு சுலபம்தான். ஆனால், அந்தப் பாதை எவ்வளவு வேதனையானது என்பதை எண்ணிடவேண்டும்! ஹக் மந்திரி சபையை 'டிஸ்மிஸ்' செய்யுமுன், பாகிஸ்தான் சர்க்காரின் பிரச்சார இலாகாவைத் தன்வசம் கொண்டு வந்திருக்கிறார், முகம்மது அலி. அதேபோல, கிழக்கு வங்கத்துக்குச் சென்ற கவர்னர் தமக்கு வேண்டியவர்களை உயர்தர போலீஸ் நியமனங்களில் அமர்த்தப் போகிறாராம்! பிரச்சாரம்—போலீஸ்—இரண்டையும், முகம்மது அலி, பெரிதென மதிக்கிறார். இந்தக் கட்டம் பாகிஸ்தானின் நலவாழ்வில் அக்கறை கொண்டோருக்கு அச்சத்தையே தரும்! அதிகார பீடத்தில் அமர்ந்ததும், தன்சொற்படி கேட்டு நடக்கக் கூடியவர்களையும், தனக்கு வேண்டியவர்களையும், முக்கியமான உத்யோகங்களில் அமர்த்திக்கொள்வது, சாதாரணமான சம்பவம் இந்த ஆசை, பிறருக்கு அஞ்சாத ஆத்மாக்களுக்கும், பிறரை அஞ்சிடச் செய்யும் ஆதிபத்யக்காரர்களுக்கும் ஏற்படும். இங்கே, அத்தகைய ஆதிபத்யக்காரராம் ஆச்சாரியாரும், செய்தார் — வேண்டிய பலரை ஆட்சி இயந்திரத்தை இயக்கும் பணியில் அமர்த்தினார். ஆனால் கண்டதென்ன! மக்களின் குமுறலுக்கு முன்பு, இந்த ஏற்பாடுகள், உதவியா செய்தன? இதே கதிதான் ஏற்படும், மாடப் புறாவை, சமையலுக்குப் பலியாக்கும்வேடர்களுக்கு! வேதனை வளரப்போகிறது, கீழ் வங்கத்தில். வித்திட்டுவிட்டார், முகம்மது அலி.

*

அரசியல் வாழ்வில் கித்தாப்பும், 'தான்' எனும் மமதையும் ஏற்பட்டுவிட்டால், அத்தகையோர் கண்களில், அன்பு மறையும்—உள்ளம் ஒரு சூதுக்கோட்டமாகும்—பாசம் மறையும், பயம் நிறையும்—வாழ்வே சுயநலமாகும், இந்த விபரீதம் கடைசியில் அந்த ஆளை சர்வாதிகாரியாக்கி, மலையுச்சிவரை ஏறச்சொல்லி, கடைசியில் உருட்டிச் சுக்கு நூறாக்கும்! ஆனால், அந்திய காலம் வரும்வரை, அந்தத் தர்பார்சூரர்கள் கையில் சிக்கி, நாடும மக்களும் அடையவேண்டிய வேதனைகளிருக்கிறதே, அவைகள் இலேசானவையாயிராது. அந்த விபரீதங்களை, நாடும் மக்களும் தாங்க நேரிடும்! அந்தக் கட்டத்தையே சுதந்திரம் மலர்ந்த ஆசிய நாடுகளில் காண்கிறோம் — இல்லையென்றால், பொதுமக்களில் ஒருவராயிருந்த அரசியல் தலைவரான முகம்மது அலி மக்களை மறந்து, கவர்னர் எனும் தனிநபரை நம்புவாரா? அவர்வசம் ஒரு மாநிலத்தையே ஒப்படைக்கும் நெஞ்சத் துணிவைப் பெறுவாரா! இந்தச் செயலுக்கு, அலி தரும் விளக்கம் — தேசிய வாழ்வுக்கு ஆபத்து வந்துவிடும் என்பது. எத்தனை நாளைக்கு இந்தத் திரையில் அடக்குமுறை ஆட்சியை நடத்த முடியும்! அன்பர் முகம்மது அலியைக் கேட்கிறோம் — ஏனெனில் இந்த சுபாவம் இங்குள்ள பண்டிதருக்கும் வளர்ந்து வருவதால் ஏற்படும் ஆபத்தை உணர்வார் என்பதால். பயன்தராது, இப்பாதை! வேடர்கள் என்றும் விடப்பட்டதில்லை, மக்கள் மன்றத்தால். ஆசிய அரசியலில், வேடர்கள் அதிகமாகிக் கொண்டு வருகிறார்கள். ஆபத்து! ஆபத்து!!

★

முக்கியமானது!

நாட்டின் முன்னேற்றத்துக்காக ரோடுகள், பள்ளிகள் முதலியவை, கட்டப்படவேண்டியது அவசியமாகும். இவையனைத்திலும் முக்கியமானது மனித சக்தி வளம் பெற வேண்டுவதேயாகும். எல்லா அபிவிருத்தித் திட்டங்களும் மனிதனது உள்ள அபிவிருத்தியையே நாட வேண்டும். —பண்டித நேரு

போபால்-ஜூன் 1.

இதோ, ஓர் புது அரசு!

அப்பாடா! — ஒரு கட்டம் முடிந்துவிட்டது, அவர்களுக்கு.

இரத்தமும் பிணமாக ஏழெட்டு ஆண்டுகள் போராடிய, அவர்களது ஆசை, ஓரளவு நிறைவேறிவிட்டது.

எதிரிகள், கைகுலுக்குகிறார்கள்! துப்பாக்கி ஏந்தி சுட்டுப் பொசுக்கிய கை—எனினும், அவர்கள், பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுகிறார்கள்.

ஆர்ப்பரித்த அரசு, அவர்களுடன் குலவவருகிறது. பகைத்தோர், 'பகை மறப்போம்' என்று பல்லவி பாடுகிறார்கள்.

வெற்றி!—வீரர்களுக்கு.

வீழ்ச்சி!—அரசு தர்பாருக்கு.

*

காண்கிறோம், இக்காட்சியை! கனல் கக்கும் உள்ளத்துடன், துப்பாக்கியையும் பீரங்கியையும் நம்பிய பர்மிய அரசு, கரீனியர்களின் கோரிக்கையை, ஏற்றுக்கொண்டுவிட்டதாம். கடந்த முதல்தேதி, கரீன் அரசு, அமைக்கப்பட்டுவிட்டதாம். பிரதமர், ஊ—நூ — நேரில் சென்று, புது அரசை ஆரம்பித்து வைத்தாராம்

அகமகிழ்ச்சிபடைவர், கரீனியர், மக்கள்! இந்தப் புது அரசை நிறுவ, அவர்கள் அடைந்த கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. மங்கோலிய ரத்தம் நிரம்பிய பர்மாவில், சையாமுக்கும் வங்கக்கடலுக்குமிடையேயுள்ள வளமிக்க நாட்டின் பழங்குடி மக்களினர். இந்தக் கரீனியர். உழைத்து வாழும் கூட்டம்! உன்னத பூமியைப் பெற்ற கூட்டம்!!

தமது இனத்தின் பெயரால், தனி அரசு ஒன்று தேவையென்று கேட்டனர். பர்மா, இசையவில்லை!

தனிநாடா! அதுவும், தனியான பெயரிலா! உங்களுக்கா? உடனேயா!—என்று பற்பல கேள்விகளைப் போட்டனர். கடிந்தும் உரைத்தனர்.

கனல் நிற்கவில்லை, கரீனியர் இதயங்களில்! "ஏன்? 1800 மைல் பரப்புள்ள எமது பூமியை நாங்கள் ஆளக்கூடாதா?" என்று கேட்டனர். "எதற்காக, ஆள வேண்டும்! ஆளத்தான் நாங்கள் இருக்கிறோமே!!" என்றனர் பர்மிய பீடத்தார். "உங்களுடன் இருப்பதால், லாபமென்ன எங்களுக்கு?" என்று கேட்டனர், விடுதலைப்படையினர். "இதோ, பார்! துப்பாக்கி!!" என்றது, ஆதிக்கபுரி. "ஓ! தயார்!!" என்று சவால் விட்டது, கரீன் படை. விளைவு! கோரமான போர்—இருதரப்பிலும், பலர் சேதம். ரங்கூனை எட்டிப்பிடிக்குமளவு. கரீனியர் பட்டாளம், பாய்ந்து சென்றது! மிரண்டது, பர்மா! வியந்தது உலகம்!! 'இவ்வளவு சாதுக்களான இவர்களா, இப்படிப்பாய்கிறார்கள்?' என்று மலைத்தனர், ஒவ்வொருவரும். மனங்குலையா மாவீரர்களோ, எதையும் எண்ணவில்லை—அவர்களது இதயத்தில், தனி அரசு எனும் கனல் எரிந்து கொண்டேயிருந்தது! அந்த ஆவேசத்தினால் உந்தப்பட்ட அந்த மாவீரர்கள். எடுத்த பணியை விடாது. தூக்கிய துப்பாக்கியைத் தளர்த்தாது, போரிட்டனர். இன்று பணிந்து ஒரு ஒப்பந்தத்துக்கு வந்தது, அவர்கள் அல்ல; சர்க்கார்!

கரீன் அரசு நிலவும் கோரிக்கையை ஒப்புக்கொண்டுவிட்டது, பர்மிய அரசு. அதனோடேயே பல மாவட்டங்களை ஒன்று சேர்த்து, அவைகள் யாவும் 'கரீன் ராஜ்யம்' என்ற பெயரும் இடப்பட்டுவிட்டது.

இந்த விழாவுக்கு பர்மியக் குடியரசு தலைவர், வாழ்த்து அனுப்பினார்! பிரதமரே நேரில் சென்று, ஆரம்பித்து வைத்திருக்கிறார்!

வெளிநாட்டுக் கொள்கை—பாதுகாப்பு — வரி விதிப்பு — போக்குவரத்து ஆகியவை மத்ய அரசிடம் இருக்குமாம். மற்ற அதிகாரங்கள் யாவும், கரீன் அரசிடம் இருக்குமாம்.

எல்லை, இன்னும் வரையறுக்கப் படவில்லை! எனினும் புது அரசு மலர்ந்துவிட்டது!!

அரசு ஒன்றை அமைத்துத்தருவதென்றால், பர்மிய அரசு, அப்போதே தந்திருக்கும். ஆனால் கரீன் மக்கள் அந்தளவோடு நின்றுவிடவில்லை—தமது மக்களின் பெயரால் ஒரு ராஜ்யத்தைக் கேட்டனர். அன்று ஒப்பவில்லை! இன்று அவர்களே, ஆரம்பித்து வைக்கின்றனர்!

விழாவில் பேசிய பர்மியப் பிரதமர், "சென்றதை மறப்போம். இனியாவது, ஒற்றுமையாக இருந்து காரியங்களைக் கவனிப்போம்" என்றாராம். இந்த விவேகம், அன்றே அரும்பியிருந்தால், ரத்தம் ஓடி இருக்குமா! பிணக்குவியல் அதிகரித்திருக்குமா!

ஆதிக்கக்காரர்களுக்கே, நல்லறிவு காலதாமதமாகித்தான் உண்டாகிறது. எனினும், மகிழ்கிறோம்! வீரப்போர் நடாத்திய கரீனியர், தமது பழம்பெரும் பெயரால் ஒரு தனி அரசைப் பெற்றுவிட்டனர்.

ஒரு கட்டம் முடிந்தது. தனி அரசு!—இப்போது. இதனால், தனிநாடு கோருவது அடங்கிவிடுமென்று நாம் புகலவதற்கில்லை. பர்மாவின் பிடியிலிலாத, தனிநாடு தமக்குவேண்டுமென்பதே அவர்கள் இலட்சியம். அதனைப் பெற இது ஓர், வாயில்! வெற்றி பெற்றோரை வாழ்த்துகிறோம்.

❀

"மன்றம்"

ஆசிரியர்:

இரா நெடுஞ்செழியன் எம். ஏ.

மொழி சிறந்த. பொருள் செறிந்த, ஆராய்ச்சிமிக்க, அரிய கதை—கவிதை—கட்டுரை நிறைந்த திங்கள் இருமுறை வெளியீடு.

*

விற்பனையாளர்கள் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

*

தனி இதழ் அணா 4

ஆண்டு கட்டணம் ரூ 6

*

விலாசங்கட்டு:- நிர்வாகி

"மன்றம்"

26, நைனியப்பன் தெரு

மண்ணடி, சென்னை-1.

ஒரு அரும்பு உதிர்ந்தது!

அந்த இளைஞன் இறந்துபோய் விட்டான்! நெஞ்சில், வேலாகப்பாய்கிறது, செய்தி.

*

"அண்ணா!

நானும் ஒரு கழகத் தொண்டன். மாநில மாநாட்டிற்கு, வருகிறேன். எப்படியாவது என்னைச் சந்தியுங்கள்"

*

இரண்டாண்டுகளுக்கு முன்பு சென்னை மாநில மாநாட்டிலே, என்னைத் தேடிக்கொண்டுவந்தான். ஆச்சரியப்பட்டேன்! சின்னஞ் சிறுவனாயிருந்தபோது, பார்த்தது—இடையில் 13 ஆண்டுகள்—18 வயது வாலிபனாக, என் முன் நின்றான். அதுவும் கழகத் தொண்டனாக! ஆனந்தமடைந்தேன் — திருநீற்றையும் துளசி மாடத்தையும் விட்டு விடாதகுடும்பம்; அங்கே இதுபோல் ஒரு வீரன். என்னே, அறிவியக்கத்தின் சக்தி'—என்று எண்ணினேன்; பூரித்தேன். "கூட்டங்களிலெல்லாம் பேசுவேன்!" என்று அந்த கொள்கை வீரன்கூறியபோது, என் மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று.

*

அறப்போர்! கருணாநிதி தலைமையில் சென்ற அறுவருக்கு ஆறு மாதம்!!—அந்தச் செய்தியிலே அந்தத் தம்பியின் பெயர் இருந்தது—வந்தப்படத்திலே உருவம் இருந்தது நினைத்தேன்! வீட்டிற்கு மூத்த மகன்—குடும்பம் பெரிது—அப்பாவும் பெரிய பணக்காரர் அல்ல—தம்பியும் திட உடல் கொண்டவனல்ல—இளைத்த உருவம்! எப்படித் தாங்கமுடியும், ஆறு மாதத்தை? எண்ணினேன். திருச்சி சென்றபோது, தோழர்களைக் கேட்டதற்கு 'எவ்வளவு சொல்லியும் கேட்கவில்லை. நான், முதல் வரிசையிலேயே செல்லவேண்டும்' என்று வீராவேசமாகக் கூறியதாக அறிந்தேன். வாழ்த்தினேன்! மகிழ்ந்தேன்!!

*

சிறையிலிருந்து திரும்பிய அன்று திருச்சியில் கண்டபோது, மனம் நொந்தேன். துரும்புபோலிருந்தது உடல்! "என்ன குமரவேல்?" என்றேன். 'பரவாயில்லை; எல்லாம் சரியாய்ப்போய்விடும்'என்றான். இதோ செய்தி கையிலிருக்கிறது, அந்த இளைஞன் இறந்துவிட்டதாக. எப்படித் தாங்கமுடியும்? கழகம், ஒரு இளந்தொண்டனை இழந்தது! மணப்பாறை, ஒரு தீவிரவாதியை இழந்தது! அவர்கள் குடும்பம், மூத்த மகனை இழந்தது! நான், என்கூடப் பழகிய ஒரு இளந்தோழனை இழந்துவிட்டேன்!

*

சாவு!—எண்ணினாலே, இதயம் குழம்பும். மலர்ந்து மணம் வீசியோர் உதிரும்போதுகூட உள்ளம் துடிக்கும். அரும்பு இந்தக் குமரவேல்! மலருமுன்பே, மந்திரியின் சேட்டையால் மரணத்துக்கு விருந்தாகிவிட்டான். துயரத்தைத் தந்துபோய்விட்டது, அந்த உயிர்.

ஆச்சாரியார் ஆட்சி போய்விட்டது!-என அகமகிழ்ந்தோம். ஆனால் தூவானம் இன்னும் விடவில்லை—எனச் சொல்கிறது, குமரவேல் சாவு.

குமரவேலைக் கொன்றது, ஆச்சாரியார் ஆட்சி வழங்கிய அடக்குமுறை என்போம்! ஆறு மாதம் சிறைவாசம் தந்த வினை என்போம்! —உணர்ச்சிமிக்க இளைஞன். எல்லோருடைய உள்ளத்தையும் தொட்ட ஒரு வாலிபன், எதிர்காலம் பற்றி இதயத்தில் கணக்கற்ற ஆசைகளைத் தேக்கி வைத்திருந்த ஒரு திராவிடமகன், சிறை வாழ்வு தந்த வேதனையால், பிணமாகி விட்டான்.

போய்விட்டான். இனிக் காண முடியாது!

*

இயக்கத்தில், அந்த இளைஞனைக் கண்டபோது, வியந்தேன்—வளரும் நம் கொள்கைகண்டு! இப்போது, அந்தளவுக்கு திகைக்கிறேன், ஒரு அரும்பு, கருகியது கேட்டு!!

இறந்த குமரவேலுக்கு, மணப்பாறையிலுள்ள சகல அரசியல்கட்சிகளும், மரியாதை செய்தனவாம். குமரவேலின்நினைவாக பஞ்சாயத்து போர்டின் சார்பில், ஒரு தண்ணீர்க் குழாயும் நிறுவப்பட்டதாம். மாற்றாரும், உற்றாரும் மனங்கலங்குமளவுக்கு, பொதுவாழ்வில், இளம் வயதில் இடம் பெற்ற வீரனை எண்ணி, வருந்துகிறேன்! அருமையான தொண்டனை இழந்த தோழர்களுக்கும், மகனை இழந்து கலங்கும் அவர்கள் பெற்றோருக்கும், எனது, துயரம் தோய்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப்போல், குமரவேல் சாவுகேட்டு பலர், கலங்குவர்! இனிஎன்னசெய்ய முடியும்?

—அரங்கண்ணல்

★

உண்டு கொழுப்போரே!

'உண்டு கொழுப்போர்'—என்று வர்ணிக்கிறோமல்லவா? எவ்வித வேலையும் செய்யாமல் இப்படிஉண்டு கொழுப்போரின் தொகை 2 கோடி இருக்கிறதாம், அமெரிக்காவில்! அசையவும் முடியாது, நகரவும் முடியாது 'மலைகள்'போல கஷ்டப்படுவோர் சுமார் இருபது லட்சம் பேர் இருக்கிறார்களாம்! இந்தஉண்டு கொழுப்போரின் பிரச்னையைத் தீர்ப்பது, பெரிய வேலையாயிருக்கிறதாம். அமெரிக்க டாக்டர்களுக்கு. சிகிச்சையால் என்ன பயன்! படுத்தால், தூக்கிவிட பத்து ஆள் வேண்டும் — மற்றவர்களைப்போல மனைவியுடன் உல்லாசமாக இருக்க முடியாது—அப்பப்பா! சதை பெருத்தோர் படும்பாடு, சாதாரணமல்லவே! துடிக்கிறார்களாம். இவ்வண்ணம் 'கொழுத்ததற்கு'ள்ள காரணம், எவ்வித வேலையும் செய்யாது, சுகமாக அவர்கள் இருப்பதுதான்—என்று டாக்டர்கள் கணக்கிடுகின்றனர். இந்தக் கஷ்டத்தை இங்கே உண்டு உறங்கும் உல்லாசிகள் அறிய வேண்டும்!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"முட்டாள்களின் நடுவிலிருப்பதால் நானும் ஒரு முட்டாள்தான்" எனக்கூறினாரல்லவா உலகஅறிவாளியென்ற பெர்னாட்ஷா. அங்ஙனமாவது துணிந்துகூறமுடியுமா? கூறுவிடினும்இவற்றையெல்லாம் "இனத்தளவதாகும் அறிவு" என்ற செயற்கையறிவின்பால் ஒதுக்கிவிடுவோம்.

இயற்கையறிவின் பாலெழுந்த அறிவுரைகளை மதிப்பவர்களும் காங்கிரசில் இருந்தார்கள் முன்பு. அவர்களெல்லாம் வெளியேறு படலமாக முடிந்தது. இன்றுள்ள வடிகட்டிய மூடநம்பிக்கைகட்கும் நேருஜியின் அறிவுரைகட்கும் சம்பந்தம் என்ன? அறிவுரைகள் சமுதாய சீர்திருத்தக் குறிக்கோளாகவன்றோ உளது.

நியாயமாகப் பார்த்தால் நேருஜியின் சொந்தக் கட்சியோ அல்லது ஏனைய அரசியல் கட்சிகளோ ஒன்றும் கவனியாது விடுத்த அறிவுரைகளை அரசியல் கூடாரத்துக்கு வெளியே உள்ள சீர்திருத்தப் பணியாளர்கள் தாராளமாக எடுத்துரைத்துச் செயல்படுத்தவும் முனைவார்களானால் அவர்கட்கு நேருஜி ஆதரவளித்திருக்கவேண்டும். அங்ஙனமின்றேல் உள்ளூறத் திருப்திப்பட்டுக்கொண்டாவது இருக்கவேண்டும். ...ம், "முட்டாள்கள்" "காட்டுமிராண்டிகள்!" "பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டியவர்கள்" என்று கூறுவதின்பொருள் தான் இன்னதென்று தெரியவில்லை.

சமுதாய மறுமலர்ச்சிக்காக உழைத்த தலைவர்களை, பேரறிஞர்கள் சாக்ரடீஸிலிருந்து மகாத்மா காந்தியார்வரை மக்களின் எதிரிகளாகக் கருதப்பட்டுத் தொல்லைகள் கொடுத்தும் நாடு கடத்தியும் கொல்லப்பட்டும் வந்தது சரித்திர வரலாறு. ஆகலால்தான் பட்டம் பதவிகளில் கருத்துக்கொண்ட தலைவர்கள் அரசியல் கட்சிகள் சமுதாய சீர்திருத்தத்திலிறங்குவதில்லை.

மக்களிடம் மடமையை வளர்ப்பதே இவர்கள் வாழ்விற்கேற்றங் காணும் செயலாகும். மக்களிடை விழிப்பு நிலை ஏற்படாத வண்ணம் கண்ணும் கருத்துமாயிருப்பர். இன்று காங்கிரசையே எடுத்துக்கொண்டால் சுயநல கோட்டையாகவும் காட்சியளிப்பதுடன் மூலை முடுக்குகளெல்லாம் கூடாரம்அடித்துக்கொண்டு மூடநம்பிக்கைகளை வளர்க்க வரிந்துகட்டி நிற்கிறார்கள். கிராமங்களிலெல்லாம் நாள் ஒன்றுக்கு 50, 60 எனச் சம்பளம் காங்கிரசு நிதியிலிருந்து கொடுத்துக்கொண்டு மூடநம்பிக்கைக் கூத்தாட்டங்களும் சீர்திருத்தக்காரர் மீது வசை புராணங்களும் பாடிவரத் திட்டமிட்டிருக்கிறார்கள். காரணம் என்ன?

100-க்கு 99 மக்கள் மூடநம்பிக்கையுள்ளவர்கள் நாட்டில். அவர்களின் தயவும் ஓட்டும்பெறவேண்டுமானால் மூடநம்பிக்கை கட்டுப்பூண் கட்டியும், விஞ்ஞானம்கற்றறிந்திருந்தாலும் அவைகளை மடக்கிஒரு புறம் வைத்துக்கொண்டு மக்கள் போக்கிலிறங்கித் தாங்களும் மூடநம்பிக்கை பாடித்தானே நல்ல பெயர் வாங்கவேண்டும். இதுதான் அவர்களது சமூக சேவை.

நேருஜி பேசுகிறார், செயலில் மறுக்கிறார். உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவதாக இல்லையா? என்றுகூடக் கேட்கலாம். அவர் அகில உலக சீர்திருத்தங்களைக் கண்டவர், பொதுவுடைமைக் கருத்துக்களைப்போற்றியவர், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பயின்றவர் என்ற ஓதாவில் அறிவுரைகள் பேசியுள்ளார். அகில இந்திய காங்கிரசுத் தலைவர் என்ற ஓதாவில் கட்சிக் கொள்கைக் கெதிரானவையென்று திராவிட இயக்கத்தினர் மீது சீறுகிறார்! ✲

முத்துக்களின் பிரகாசம்

இயற்கை முத்துக்களும் செயற்கை முத்துக்களும் மிக அழகான ஒளி விளைவுகள் ஏற்படுத்துவது இதுவரை கவனிக்கப்படாமலிருந்தது. பௌதிகத்தில் நோபல் பரிசு பெற்ற டாக்டர் சி. வி. இராமனும், திரு. டி. கிருஷ்ணமூர்த்தியும் சேர்ந்து பெங்களூரிலுள்ள இராமன் ஆராய்ச்சி நிலையத்தில் செய்த சோதனைகளின் பயனாகவே இவ்வுண்மை வெளியிடப்பட்டுள்ளது.

முத்துக்கள் மிக அழகிய பொருள்களாக விளங்குவதற்கு மேலே கூறப்பட்ட அவற்றின தன்மைதான் காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

முத்தின் இப் பிரதிபலிப்பை விளக்கி அவர்கள் கூறுவதாவது: முத்தின் தளத்தின் மேல் வெகு தொலைவிலிருந்து வரும் ஒளியின் பிம்பத்தைச் சுற்றி வண்ண ஒளிக் கற்றைகள் சிதறி வளையமாக விழுகின்றன. பிம்பம் முழுப்பமின்றி நன்கு அமைகின்றது பிரதிபலிக்கப்பட்ட உருவத்தின்வண்ணத்துடன் வளையத்தின் பிரகாசமான பாகங்களில் உள்ள வண்ணம் சேர்ந்து மிகைபட அமைகிறது. பல்வேறு திக்குகளிலும் வளையத்தின் நீட்சி முத்தின் சரியானஉருவத்திற்கேற்ப அமைகிறது. வளையம என்று குறிப்பிடப்படுவது ஒளி மலையேயாகும். மிகச் சரியாக அமைக்கப்பெற்ற முத்தின் மாதிரிகளில்பிரதிபலிக்கப்பட்ட உருவத்தின் இருபக்கங்களிலும் இரண்டு வட்ட வில்கள் போன்று சிதறி ஒளி மாலை அமைக்கின்றது. ஒளி அதிகமானால் மேற்கோளாக ஒரு சாளரத்தின் வழியே வரும் ஒளிக் கதிர்களை முத்தின் வழியாகச் செல்லுமாறு செய்தால், பிரதிபலிக்கப்பட்ட உருவமும் சிதறிய ஒளிமாலையும் ஒன்றின்மேல் ஒன்றாக விழுகின்றன. இதன் விளைவாக முத்து மிகவும் பிரகாசமான, வெள்ளி உலோகம்போன்று வெண்மையான பொருளாக நமது கண்ணுக்குத் தோன்றுகிறது. சிதறும் ஒளிமாலை இச் சோலையில் விழாமல் இருந்தால் எஃகு உருண்டைக் குண்டுகளை நன்றாகப் பளபளப்பாக்கவைத்திருந்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் முத்துக்களும் இருக்கும் முத்துக்களுக்குவிசேட அழகு வந்திருக்காது.

சங்குகளின் படுக்கையில் அர்கொனைட் படிகங்கள் கோடிக்கணக்கில் அமைய, அவை சேர்ந்துதான் முத்து அமைகிறது. ஆகவே உருண்டையான தளங்கள் ஆயிரக்கணக்கில் ஒன்றின்மேல் ஒன்றாக அமைந்து, அத்தகைய தளம் ஒவ்வொன்றும் சிதறிய ஒளி மாலையையும் அதிலுள்ள வண்ணங்களையும் உண்டாக்குகிறது. முத்தின்மேல் வந்து விழும் ஒளிக் கதிர்கள் இந்த ஒவ்வொரு படிகமும் சிதறச் செய்கின்றன. இதனால் மேற் கூறப்பட்ட ஒளி விளைவு நேர்கின்றது.

[வாரச்செய்தி]

4. அனுபவப் பள்ளியில்

கடைத் தெருவைத் தாண்டி அடுத்து இருந்த தெருவில் கார் போய்க்கொண்டிருந்தது.

“டேய்! அந்த பஸ் ஸ்டாப் அருகில் கொஞ்சம் மெதுவாப் போ!” என்றார் சின்ன முதலாளி.

உடனே வேகத்தைக் குறைத்தான் ஆறுமுகம்

பஸ் ஸ்டாப் அருகில் வந்ததும் பாஸ்கர் காரின் வெளியே தலையை நீட்டிப்பார்த்தார். அவர் காலேஜ் நண்பன் சீனு நிற்பதைக் கண்டார்.

“டேய், நிறுத்துடா!” என்று கூறிவிட்டு “ஹலோ, சீனு...!” என்றார்.

“ஹலோ, பாஸ்கர்!” என்று கூறியவண்ணம் அவனும் காரில் ஏறி உட்கார்ந்து விட்டான்.

காரில் மற்றொரு வாலிபன் ஏறி உட்கார்ந்தது ஆறுமுகத்திற்குக்கொஞ்சம் ஆறுதலாகத் தோன்றியது. இனிமேல் அவனை அதிகமாகச் சின்ன முதலாளி கவனிக்கமாட்டார் அல்லவா? காரிலே ஏறிய சீனு பேச ஆரம்பித்துவிட்டான்.

ஆறுமுகமும் காரை வேகமாக விட்டவண்ணமே அவர்கள் பேச்சைக் கவனிக்கலானான்,

“என்னப்பா, ஒரே குஷியாயிருக்கே?” என்றான் சீனு.

இந்தளவு சமமாக தன் முதலாளியோடு பேசும் சீனுவைப் பற்றி ஆறுமுகத்திற்கு உள்ளூர மதிப்பு அதிகமாகியது.

“ஒன்றுமில்லேப்பா.....சும்மா தான்”

“அதிருக்கட்டும். என்ன, இன்னும் ஸ்ட்ரைக்கை விட்டு வைத்திருக்கிறார், உன் தந்தை” என்றான் சீனு கொஞ்சம் அழுத்தமாக.

“என்னமோ தெரியலேப்பா. அவனுங்கதான் எது பேசணுமென்றாலும் அந்த நல்லமுத்து என்கிறவனை அனுப்புறாங்க. அவன் எதிலேயும் பிடிவாதமாயிருக்கான். என்ன செய்வது. எனக்கு ஒன்றுமே புரியலே. அப்பா எதாவது பார்த்து செய்வாங்க.

அப்பாவுக்குவேறு எப்போதுமுள்ள ‘இருதய நோய்’ இப்பொழுது அதிகமாக இருக்கிறது டாக்டர் நல்ல ‘ரெஸ்ட்’ வேண்டுமென்கிறார். அவருக்கு ஓய்வு எடுக்க நேரமேது?

“அப்படியா......‘இருதயநோய்’ன்னு பத்திரமா பார்த்துக்கோ, பாஸ்கர்.

இப்பொழுது இருக்கிற வியாதியிலேயே ரொம்ப ஆபத்தான வியாதி அதுதானப்பா!''

"ஆபத்தானதுதான்! ஆனால், அதற்கு ஏற்ற சிகிச்சை செய்ய நேரம்? இந்தப் பசங்கள் எவ்வளவு கெட்டுப்போயிட்டான்கள் தெரியுமா? நம்ப வீட்டு டிரைவர் பழனி இருந்தானே, அவன்கூட ஸ்ட்ரைக் செய்கிறவங்களோடே சேர்ந்திருக்கான். அவன் முன்னே மில்லிலே லாரி டிரைவர். அதனால் பழையபடி போயிட்டான். இன்றைக்குத்தான், அப்புறம், இவனை டிரைவரா போட்டுது.

ஆறுமுகம் முகத்திலே அசடு வழிந்தது. ஸ்ட்ரைக் — மில் — பழனி இவைகளை வைத்துக்கொண்டு அவனால் முழு நிலைமையையும் உணர முடியவில்லை.

இதற்குள் சீனு ஆறுமுகத்தைப் பார்த்துவிட்டு மறுபடியும் பேச ஆரம்பித்தான்.

"இவன் யார்? ஆதித்திராவிடனா?''

"அப்படித்தானிருக்கும். ஒரு தொந்திரவில்லை...........'' என்று ஆங்கிலத்தில் ஏதோ பேசினார் சின்ன முதலாளி. ஆறுமுகத்தினால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனால் சீனு "அதுசரி! என்று கூறியது மாத்திரம் காதில் விழுந்தது.

"ஆமாம் இந்த நல்லமுத்து என்பவன் யாரப்பா? தொழிலாளிக்கு மூன்று மாத போனஸ் என்று அறிவித்தும்கூட நல்லமுத்து சொன்னால்தான் வருவோமென்று கூறுகிறார்களாமே'' என்றார் பாஸ்கர்.

"சேச்சே......யாரோ ஒரு மட்டரகம். இந்தக்காலத்திலே ஜாதிமதம், பார்ப்பனர்பார்ப்பனரல்லாதார் என்று ஏதோ உளறிக்கொண்டிருக்கிறான். அவன் ஒண்ணும் கெட்டிக்காரனில்லை. பத்திரிகையிலே எங்கேயாவது அவன் பேர் வருதா என்று பார், பாஸ்கர். வரவே வராது. ஏதோ ஒரு கூட்டம் — அதுவும் உங்க மில் தொழிலாளிகள் பதினைந்தாயிரம் பேர் அவன் கையில்சிக்கிக்கொண்டுவிட்டார்கள். அதைவைத்துகொண்டு பயமுறுத்திப் பார்க்கிறான்!''

பாஸ்கரர் அவன் கூறியதை ஒத்துக்கொண்டார். இருந்தாலும் அவர் கண்ட உண்மையை மறக்க முடியவில்லை.

"ஆனாலும் தொழிலாளிகளுக்கு அவனிடத்தில் நல்ல நம்பிக்கையப்பா. நேற்று மில்லுக்கு மானேஜரோடு போயிருந்தேன். ஒரு ஈ, காக்காய்கூட இல்லை அவ்வளவு பேரும் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்!'' என்றார்.

சீனு அதற்கும் பதில் தயாராய் வைத்திருந்தான்.

"சேச்சே. அது ஒன்றும் பெரிய விஷயமில்லையப்பா! லேபர் யூனியன் உண்டாக்குகிறது தான். உலகத்திலேயே சுலபமான அரசியல் வேலை.

ஒரு அணா வாங்கிறவனிடம்நான் சொற்படி கேளு; உனக்கு இரண்டணாவாங்கித் தருகிறேன் என்றால் அவன்தான் சேரமாட்டான். நம்மைப்போல இருக்கிறவர்களுக்கு நேரமிருப்பதில்லை; அதோடு எதற்கு ஒரு குடும்பம்மாதிரி வேலை செய்து பிழைத்துவரும் தொழிலாளிக்கும் அவனுக்கு உயிர் வாழ வசதி செய்து தரும் முதலாளிக்கும் மனக்குரோதம் ஏற்படும்படி செய்யணும் என்று நினைக்கிறோம்.

இந்த நல்லமுத்து மாதிரி பசங்களுக்கு எப்படியாவது இந்தச் சண்டைகளை மூட்டிவிட்டு பிறகு அதில் வயிறு வளர்ப்பதுதான் வேலை. அதனாலேதான் உங்களைப் போல நல்ல குடும்பங்களுக்குக்கூட தொல்லை வருகிறது! அந்தப் பயலை ஒழிச்சால்தான், நம் தேசம் உருப்படும்! என்று ஆவேசமாகக் கூறினான், சீனு.

பாஸ்கர் அவன் கூறியதில் தெளிவுப் பெற்றவர்போல "ஆமாம்,அது சரிதான்!'' என்றார்.

ஆறுமுகத்திற்கு இந்த தொழிலாளர் சங்கம், வேலை நிறுத்தம், கூலி உயர்வு இதெல்லாம் ஒன்றும் சரியாகப் புரியவில்லை. அவன் டிரைவர் கந்தசாமியின்ரிப்பேர் ஷாப்பிலே இருந்தபோது. அடிக்கடி தெருவில் ஊர்வலங்கள் போவதையும், அதில் "புரட்சி ஓங்குக', முதலாளிகள் ஒழிக' பாட்டாளிகள் வாழ்க!'' என்ற கோஷங்களையும்கேட்டிருக்கிறான். ஆனால்அந்தவார்த்தைகளுக்கு முழு அர்த்தத்தையும் அவன் தெரிந்து கொண்டதுமில்லை—யாரும் தெரிவித்ததுமில்லை.

இப்பொழுது சீனு கூறியதிலிருந்துதான் அந்தக் கோஷங்கள் எப்படிஏற்படுகிறது என்றுதெரிந்துகொண்டான்!

இவைகளைப்பற்றி மேலும் அவன் சிந்திக்கத் தயாராயில்லை. அவன் முதலாளியின் மில்லில் ஏற்படும் தகராறைப் பற்றி அவன் ஏன் சிந்திக்கவேண்டும்? அவனுக்குச் சம்பந்தமில்லாத விஷயம் அது என்றுதான் அவனுக்குப்பட்டது.

இதற்குள் சீனுவின் குரல் கேட்டது.

"ஒன்னுவைச்சுக்கோ பாஸ்கர். ஆண்டவன் போட்ட விதியை இவனுங்க மாற்றமுடியுமா? நீ அவனுங்களுக்கு லட்சம் ரூபாய்தான் கொடு. அப்பொழுதாவது அவனுங்க சந்தோஷமாயிருக்க முடியுமா? அதுதான் இல்லை எப்போ ஆண்டவன்கொடுத்ததைவைத்துக்கொண்டு திருப்தியா வாழக்கத்துக்கலேயோ, அன்றே அவன்வாழ்கை அழிந்தது! வாழ்க்கையிலே போதுமென்ற மனம் வேணும்!''

"கட்டாயமா, வேணும். சும்மா பணமிருந்தா மாத்திரம்போதுமா?''

'ஹும்......அதைச் சொல்லு!'' இந்தத் தத்துவங்களை ஆறுமுகத்தால்உணரமுடியவில்லை "பணமில்லையென்றால் எப்படிச்சாப்பிடுவது?'' ஆறுமுகத்திற்கு இந்தக்கேள்விக்கு பதில் கிடைக்கவில்லை. ஏதோ படித்தவர்கள் பேசிக் கொள்கிறார்கள்; அதுவும் அவனுக்கு சோறுபோடும் முதலாளி! ஆகவே அது சரியாய்தானிருக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டான்.

இந்த நேரத்திலே கார் பீச்சு ரோட்டை அடைந்தது.

"ஏண்டா, டிரைவர் பீச்சு ரோட்டிலேகூட ஏன் வேகம். கொஞ்சம் மெதுவாப்போ!'' என்றார் பாஸ்கர்.

ஆறுமுகம் உடனே வேகத்தைக் குறைத்தான்.

"அப்போ, இன்று காலேஜிற்கு வருகிறாயா? எங்கே ஒரு வாரமா காணோம்?'' என்றார் பாஸ்கர்.

"ஆமாம்பா. ஒருவாரமா அத்திம் பேரைப் போய்ப் பார்த்துண்டிருக் கேன். சம்பள பணம் அவர்தானே கொடுக்கணும்...!" என்று இழுத்தான் சீனு.

"அடஎழவே! சம்பளத்திற்காகவா ஒரு வாரம் விளையை இழந்தே.

எவ்வளவப்பா, நூற்றி இருபது தானே?"

"ஆமாம், பாஸ்கர்!"

"நீ வாப்பா, நான் தருகிறேன். பின்னால் கிருஷ்ணசாமி கொடுக்கிறப்ப தாப்பா!"

"ரொம்ப தாங்கஸ்!"

"என்னத்திற்கு...... என்னிடம் முன்னாடியே சொல்கிறதில்லையா? அன்று உன் வீட்டிற்குக்கூட வந்தேன். உன் தங்கை கமலா தானிருந்தாள். நல்ல வாயாடியப்பா. எஸ். எஸ். எல். சி. கேள்வித்தாள் எல்லாம் எப்படி 'அவுட்' ஆயிடுத்தென்று ரொம்ப நாழி சொல்லிக் கொண்டே இருந்தாள்"

"அதோடு விட்டாளா...! நீ ஒரு பேனைகொடுத்துட்டுபோனியாமே, அதை எப்பப் பார்த்தாலும் வைத்துக் கொண்டு உன்னைப்பற்றிப்பேசுவதுதான் வேலை!"

"அப்படியா!"

"ஆமப்பா!"

"இன்றைக்கு மாலை வீட்டுக்குப் போவமா?"

'ஓ! போகலாம். அவகூட சினிமாவுககுப்போகனு மென்றாள். அம்மாவையும் அவளையும் அனுப்பிக் கலாம்!"

"அது ஏன் அவர்களை மாத்திரம்......நாமெல்லோருமே போகலாம் சீனு!'

"ரொம்ப சரி...!"

இந்தப் பேச்சு வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே ஆறுமுகம் காரை, காலேஜையும் தாண்டி ஓட்டிக் கொண்டு போய் விட்டான்.

சீனுவின் பேச்சில் ரசனை மிகுந்த கட்டத்தை முடித்த பாஸ்கர் திரும்பி பார்த்தபோது கார் காலேஜையும் தாண்டிப் போவதுதெரிந்தது.

"எண்டா, சோம்பேறி! காலேஜ் அதோபோயிட்டுதேடா! முட்டாள் நிறுத்துடா, பின்பக்கம் போகாதே திரும்பிப் போ! சனியன். ஒரு எழவும் தெரியாத சுத்த கண்ட்ரி பசங்களை யெல்லாம் கட்டிக்கிட்டு மாரடிக்க வேண்டியிருக்கு!" என்று கத்தினர், பாஸ்கர்.

ஆறுமுகம் தான் மன்னிக்க முடியாத தவறைச் செய்துவிட்டதாகவே நினைத்துப் பயமடைந்தான். மெதுவாகக்காரைத் திருப்பிகாலேஜிக்குள் கொண்டுபோய் நிறுத்தினன்.

"சரிதான், கிடக்கிறான். நாம் பேசிக் கொண்டேவந்துவிட்டோம். அவனும் புதுசு; விஷயம் தெரியவில்லை!" என்று சீனு இறங்கியபோது கூறியது ஆறுமுகத்திற்குக்கொஞ்சம் தைரியத்தைக் கொடுத்தது.

நல்லவேளையாகப்பாஸ்கர் யேலும் அவனுக்கு 'டோஸ்' கொடுக்கவில்லை.

காரிலிருந்து இறங்கியவுடன் "டிரைவர்..." என்றார்.

ஆறுமுகம் திரும்பினன், பயபக்தியோடு.

"நேராக பங்களாவிற்குபோடா!" என்றார்.

"சரிங்க......"என்று கூறிவிட்டு காரில் ஏறி உட்கார்ந்தான், ஆறுமுகம்.

அரைமணி நேரத்தில் மறுபடியும் பாக்யபவனத்திற்குவந்துசேர்ந்தான். காரை முன்மண்டபத்தில் நிறுத்திவிட்டு, வராந்தாவில் வந்து பழையபடி உட்கார்ந்தான்.

'சின்ன முதலாளி ரொம்ப கோபக்காரருதான். அம்மா சொன்னமாதிரி அவர்கள் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டால் தான் நல்ல பேரு எடுக்க முடியும். சின்ன ஐயாதான் இப்படி! புஷ்பா அம்மா எப்படியோ?

பொதுவாகவே பெண்கள் அதிகாரப் பிரியர்கள்.

அதுவும் இந்த மாதிரி மாளிகையிலிருந்தால்......!

இப்படியெல்லாம் எண்ணிக் கொண்டே ஒரு மணி நேரத்துக்கு மேலாகவே வராந்தாவிலேயே உட்கார்ந்திருந்தான் ஆறுமுகம் புஷ்பாவோ பேப்பரைப் படித்தவண்ணமிருந்தாள். சில நேரங்களில் பேப்பரைப் பார்ப்பதைவிட்டுதோட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு திடீரென்று எழுந்து ஹாலின் சுவரோரத்தில் வைக்கப்பட்டிருந்த ரேடியோவைத் திருப்பினள்.

ஆறுமுகம் அதுவரை கேட்டிராத முறையில் ஏதோ ஒரு நாதம் அந்தபெட்டியிலிருந்துஎழும்பியது. 'ஐரோப்பிய சங்கீதம்' என்று கூறிவைக்கும் ரேடியோ இசை அது என்பது மாத்திரம் அவனுக்கு தெரியவந்தது. ஏனென்றால் இந்த மாதிரி சங்கீதத்தை மாலை நேரங்களில் பார்க் ரேடியோவில் கூட வைப்பதைக் கேட்டிருக்கிறான்.

புஷ்பா இசையை ரசித்தவண்ணமே அப்படியே!ரேடியோபெட்டி மேல் சாய்ந்து விட்டாள். மெய் மறந்து அவள் அந்தநாதத்தை ரசிப்பதைக் கண்ட ஆறுமுகம்ஆச்சரியப் பட்டான். ஏதோ பேச்சென்று அழுவதுபோலிருந்ததேதவிர அவனுக்கு வேறெந்த உணர்ச்சியும் அந்த இசையைக் கேட்டபோதுஉண்டாகவில்லை.

இந்தக் காட்சியை அவன் பார்த்துக் கொண்டிருக்கும்போது நடு ஹாலில்தொங்கிக்கொண்டிருந்த கடிகாரம் பதினோருமணி ஆனதற்கு அடையாளமாக டிங்—டாங் என்று அடிக்க ஆரம்பித்தது.

"ஐயோ...! நாழியாகிவிட்டதே!" என்று கூறிக்கொண்டு துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடிவந்தாள் புஷ்பா.

அவள் வெளியே ஓடிவருவதைப் பார்த்தவுடன் எழுந்து நின்றான் ஆறுமுகம்.

"அண்ணன் காலேஜிக்கு போயாச்சா......? என்றாள் புஷ்பா.

ஆறுமுகம் திகைத்துப் போய் "பத்துமணிக்கே விட்டுவிட்டு வந்தேனுங்க..." என்று மெதுவாக் கூறினன்.

"சரி... இதோ வரேன்..." என்று கூறிக்கொண்டே மாடிப் படிகளில் ஏறினள்.

"என்னம்மா அவசரம்......?" என்று கூறிக்கொண்டே அப்போது தான் எதிரில வந்தார் உத்தமநாத பிள்ளை—ஆறுமுகத்தின் முதலாளி.

"ஒன்னுமில்லேப்பா...காலேஜிற்குப் போகனும். பேப்பர் படித்துக் கொண்டே இருந்தேன். நாழியாகிவிட்டது!" என்று கூறிக்கொண்டே ஓடினள் புஷ்பா.

(தொடரும்)

வட ஆற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக
2-வது சமூக சீர்திருத்த அரசியல் மாநாடுகள்

ஜூன் 19, 20 தேதிகளில்

வேலூர் பாரக்ஸ் மைதானத்தில் அமைத்துள்ள

அழகிரி பந்தலில்-முத்து அரங்கில் நடைபெறும்

19—6—54 சனி	20—6—54 ஞாயிறு
சமூக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர்:	தலைவர்:
ஈழத்து அடிகள் பி. ஏ.	**கே. ஏ. மதியழகன்** பி. ஏ.
திறப்பாளர்:	திறப்பாளர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.	**நாஞ்சில் கி. மனோகரன்**

ஓவியக் கண்காட்சித் திறப்பாளர்:

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

இசை முரசு நாகூர் அனீபா குழுவினரின் இசை விருந்தும்

இரண்டு நாட்களிலும் எஸ். எஸ். இராஜேந்திரன் குழுவினரால்

அம்மையப்பன், சந்திரமோகன்

நாடகங்கள் நடைபெறும்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, ஈ. வி. கே. சம்பத், மு. கருணாநிதி, என். வி. நடராசன், சி. பி சிற்றரசு, அ. பொன்னம்பலனார், ஆசைத்தம்பி, அன்பழகன், அரங்கண்ணல், என். எஸ், இளங்கோ தில்லை வில்லாளன், ப. உ. சண்முகம், கண்ணதாசன், ஏ கோவிந்தசாமி M. L. A., அருண்மொழி, பூங்கோதை, சத்தியவாணிமுத்து. தூத்துக்குடி தோழர்கள் கே வி கே சாமி. இராசதங்கப்பழம், நடராசன், சிவசாமி, ரத்தினம்; இரே இளம்வழுதி M . . B. L., எம். எஸ் ராமசாமி, ஏ. கே. வேலன் ஆகியோரும், திராவிட சட்டசபை M L A-க்களும், புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரன், நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி, மற்றும் பல இயக்கத் தோழர்களும் கலந்துகொள்வார்கள்.

வ. கு. தலைவர்கள்	செயலாளர்கள்	பொருளாளர்
ஏ. எல். சி. கிருஷ்ணசாமி	வி. ஆர். ஆதிமூலம்	வி. எஸ். அரங்கநாதன்
எம். பி. சாரதி எம். சி.	கே. சுப்பிரமணியம்	
தொ. ப. தலைவர்கள்	**விளம்பர உறுப்பினர்**	**அலுவலகப் பொறுப்பாளர்**
அ. கருத்தோவியன், எஸ். குப்புசாமி	சிவானந்தம்	இராதாகிருஷ்ணன்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.